# அப்போஸ்தலருடைய நடபடிகள்

பாடம் 1

## அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் பின்னணி

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

நூலாசிரியர் ........ 2

லூக்கா எழுதின சுவிசேஷம் ........ 2

வெளிப்படையான ஆதாரங்கள் ........ 3

மறைமுக ஆதாரங்கள் ........ 4

ஆதி சபை ........ 5

கையெழுத்துப் பிரதிகள் ........ 5

ஆதி சபை தலைவர்கள் ........ 7

புதிய ஏற்பாடு ........ 8

தடயங்கள் ........ 8

லூக்கா ........ 9

வரலாற்று அமைப்பு ........ 10

தேதி ........ 11

கி. பி.70 க்குப் பிறகு அப்போஸ்தலருடைய நடபடிகள் ........ 11

கி.பி.70க்கு முன் ........ 13

முதல் வாசகர்கள் ........ 14

தெயோப்பிலு ........ 14

பரந்த வாசகர்கள் ........ 15

சமூக சூழல் ........ 16

ரோமப் பேரரசு ........ 16

யூதர்கள் ........ 18

இறையியல் பின்னணி ........ 21

பழைய ஏற்பாடு ........ 21

வரலாறு ........ 22

இஸ்ரவேல் ........ 24

தேவனுடைய ராஜ்யம் ........ 28

யூத இறையியல் ........ 28

யோவான் ஸ்நானகன் ........ 29

கிறிஸ்தவ இறையியல் ........ 31

லூக்கா எழுதின சுவிசேஷம் ........ 33

இயேசு ........ 34

அப்போஸ்தலர்கள் ........ 35

முடிவுரை ........ 37





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

சிறந்த ஜெர்மன் இசையமைப்பாளரான லுட்விக் வான் பீத்தோவன் தனது அழகான மற்றும் திறமையான இசையமைப்பிற்காக உலகம் முழுவதும் இன்னும் நினைவுகூரப்படுகிறார். அவரது இசையமைப்பு எவ்வளவு அற்புதமாக இருக்கின்றது என்று நமக்குத் தெரியும், அதே நேரம் பீத்தோவன் ஒரு இளைஞனாக இருந்தபோது அவர் தன் செவித்திறனை படிப்படியாக இழந்ததை நாம் நினைவில் கொள்ளும்போது அவரது படைப்புகள் இன்னும் நம்மை ஈர்க்கின்றன. உண்மையில், பீத்தோவன் முற்றிலும் காது கேளாதவராக இருந்தபோது அவரது சிறந்த படைப்புகளில் பலவற்றை படைத்தார் என்பதை உணர்ந்து கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது. பீத்தோவனின் வாழ்க்கையின் பின்னணியை அறிந்துகொள்வது அவரது இசை மீது இன்னும் அதிக ஈர்ப்பை ஏற்படுத்துகிறது.

அதே போல, வேதவசனங்களைப் பாராட்டுவது பீத்தோவனைப் பாராட்டுவதைப் போன்றது. வேதாகமத்தின் பல்வேறு புத்தகங்கள் தேவனின் வெளிப்பாட்டைப் பறைசாற்றும் வல்லமையையும் தெளிவையும் பார்ப்பது கடினம் அல்ல. ஆனால் வேதத்தை எழுதியவர்களின் பின்னணிகள், அவர்களின் உலகம், அவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் நோக்கங்களைப் பற்றி நாம் அறியும்போது, வேதவசனங்களைப் பற்றிய நமது புரிதலும் போற்றுதலும் மிகவும் ஆழமாகிறது.

இதுவே *அப்போஸ்தலருடைய நடபடிகள்* என்கிற நமது தொடரின் முதல் பாடமாகும். இந்தத் தொடரில் நாம் புதிய ஏற்பாட்டின் ஐந்தாவது புத்தகத்தை ஆராய்வோம், பெரும்பாலும் அப்போஸ்தலர்களின் செயல்கள் அல்லது வெறுமனே செயல்கள் என்று இது அழைக்கப்படுகிறது. இந்த பாடத்திற்கு ”அப்போஸ்தலருடைய நடபடிகளின் பின்னணி” என்று நாம் தலைப்பிட்டுள்ளோம், மேலும் இந்த புத்தகத்தின் போதனைகளை இன்னும் ஆழமாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ளவும் பாராட்டவும் உதவும் பல அடிப்படை காரியங்களைப் பார்ப்போம்.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் பின்னணியின் மூன்று முக்கிய அம்சங்களை நாம் பாடத்தில் பார்ப்போம். முதலில், புத்தகத்தின் எழுத்தாளரைப் பற்றி ஆராய்வோம். இரண்டாவதாக, அதன் வரலாற்று அமைப்பைப் பார்ப்போம். மூன்றாவதாக, அதன் இறையியல் பின்னணியை ஆராய்வோம். அப்போஸ்தலருடைய நடபடிகளின் எழுத்தாளரைப் பற்றி முதலில் பார்க்கலாம்.

# நூலாசிரியர்

எல்லா வேதவாக்கியங்களையும் போலவே, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகமும் பரிசுத்த ஆவியால் அருளப்பட்டதாகும். ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது என்பதால் மனித எழுத்தாளர் மீதான கவனம் குறைக்கப்படக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் எழுத்துக்களை பிழையின்றி வைத்திருந்தார், இருந்தாலும் அவர் அதன் மனித எழுத்தாளர்களின் பின்னணிகள் மற்றும் நோக்கங்களைப் பயன்படுத்தினார்.

மூன்றாம் சுவிசேஷத்தின் எழுத்தாளரான லூக்கா தான் அப்போஸ்தலருடைய நடபடிகளின் எழுத்தாளர் என்கிற பாரம்பரிய நம்பிக்கைகள் உள்ளன. ஆனால் மூன்றாவது சுவிசேஷமோ அல்லது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகமோ குறிப்பாக எழுத்தாளரின் பெயரைக் குறிப்பிடவில்லை. எனவே, லூக்கா தான் எழுத்தாளர் என்பது பற்றிய பாரம்பரிய பார்வையை உறுதிப்படுத்துவதற்கான காரணங்களை நாம் பார்க்க வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் எழுத்தாளர் குறித்து மூன்று கோணங்களில் ஆராய்வோம். முதலில், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை லூக்கா சுவிசேஷத்துடன் ஒப்பிடுவோம். இரண்டாவதாக, ஆரம்பகால சபை வரலாற்றையும் லூக்கா தான் எழுத்தாளர் என்பது பற்றிய அதன் சாட்சியையும் ஆராய்வோம். மூன்றாவதாக, இந்தப் புத்தகங்களை லூக்கா எழுதியதாகக் குறிப்பிடும் புதிய ஏற்பாட்டின் மற்ற அம்சங்களை சுருக்கமாகப் பார்ப்போம். லூக்காவின் சுவிசேஷத்திலிருந்து அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் எழுத்தாளர் பற்றி நாம் முதலில் கற்றுக்கொள்ளலாம்.

## லூக்கா எழுதின சுவிசேஷம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை மூன்றாவது சுவிசேஷத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இரண்டு வகையான சான்றுகள் வெளிவருகின்றன. ஒருபுறம், இதைக் குறித்து இரண்டு புத்தகங்களிலும் நேரடியாகக் கூறப்பட்ட வெளிப்படையான தகவல்கள் உள்ளன. மறுபுறம், இந்த புத்தகங்களின் பாணி மற்றும் உள்ளடக்கத்திலிருந்து மறைமுகமான சான்றுகளும் உள்ளன. இரண்டு புத்தகங்களுக்கும் ஒரே பொதுவான எழுத்தாளர் தான் என்பதைக் குறிக்கும் வெளிப்படையான ஆதாரங்களுடன் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## வெளிப்படையான ஆதாரங்கள்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் முன்னுரையில் அதாவது 1:1 இல், இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> தெயோப்பிலுவே, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன் (அப் 1:1).

இங்கே எழுத்தாளர் தனது "முன்னாள் புத்தகம்" பற்றி பேசினார், அதாவது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டாம் அத்தியாயமாக இருக்கின்றது. இந்த புத்தகத்தை தெயோப்பிலு என்ற நபருக்கு எழுதியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இப்போது லூக்கா 1:1-4 இல் உள்ள இதே முன்னுரையை கவனியுங்கள்:

> மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1: 1-4).

மீண்டும், இந்த பத்தி தெயோப்பிலு என்ற ஒருவரைக் குறிக்கிறது. ஆனால் முந்தைய புத்தகத்தைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் மூன்றாவது சுவிசேஷம் இரண்டும் தெயோப்பிலுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன, மேலும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் "முன்னாள் புத்தகத்தை" குறிக்கிறது. லூக்கா சுவிசேஷம் முதல் தொகுதியாகவும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டாம் தொகுதியாகவும், இந்த புத்தகங்களின் ஆசிரியர் குறைந்தபட்சம் இரண்டு தொகுதிகளை உருவாக்கினார் என்பதற்கு இந்த உண்மைகள் வலுவான சான்றுகளாக இருக்கின்றன. உண்மையில், இந்த இரண்டு முன்னுரைகளுக்கு இடையேயான தொடர்பு, ஒரு எழுத்தாளர் இரண்டு-தொகுதி படைப்புகளை உருவாக்கிய ஒரு பண்டைய இலக்கிய வழக்கத்தை பிரதிபலிக்கிறது. உதாரணமாக, ஜோசிஃபஸ், இரண்டு தொகுதிகளிலும் ஒரே மாதிரியான முன்னுரைகளைக் கொண்ட *எகைன்ஸ்ட் அபியோன்* என்ற தலைப்பில் இரண்டு தொகுதிப் படைப்பை எழுதினார்.

இந்த வெளிப்படையான தொடர்புகளுக்கு அப்பால், அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் மூன்றாவது சுவிசேஷம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள மறைமுகமான தொடர்புகளும் உள்ளன. பல புதிய ஏற்பாட்டு அறிஞர்கள் இந்த புத்தகங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளை சுட்டிக்காட்டியுள்ளனர். இவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதற்கு மட்டுமே காலம் அனுமதிக்கும், ஆனால் அவை பொதுவான எழுத்தாளர் தான் இதை எழுதினார் என்பதைக் குறிப்பதற்கான குறிப்பிடத்தக்க மறைமுகமான ஆதாரங்களை வழங்குகின்றன.

## மறைமுக ஆதாரங்கள்

நாம் இப்போது பார்த்தபடி, எழுத்தாளர் பல்வேறு ஆதாரங்களை ஆராய்ந்து, தெயோப்பிலுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு ஒழுங்கான விவரத்தை உருவாக்கியதாக லூக்கா 1:1-4 கூறுகிறது. லூக்காவின் சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் உள்ள கணக்குகள் ஒரே மாதிரியான வழிகளில் வரிசைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன என்று பல அறிஞர்கள் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லை. புத்தகங்களின் கலவை அமைப்பிலும் பல ஒற்றுமைகள் உள்ளன. புத்தகங்கள் இரண்டும் ஏறக்குறைய ஒரே நீளம் கொண்டவை, ஒவ்வொன்றும் நிலையான அளவிலான சுருள்களை கொண்டிருக்கின்றன.

இதைத் தாண்டி, ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரே மாதிரியான காலவரிசை நீளம் உள்ளது. லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டும் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையிலான ஆண்டுகளை உள்ளடக்கியிருக்கின்றன. மேலும் புத்தகங்களுக்கு இடையே இணையான கருப்பொருள்களும் உள்ளன. ஒரு உதாரணமாக, யூத மதத்தின் தலைநகராகவும் யூத ராஜ அதிகாரத்தின் இடமாகவும் இருக்கும் எருசலேமில் இயேசுவின் கைது, விசாரணை, பாடு, மரணம் மற்றும் வெற்றியை நோக்கிய பயணத்துடன் சுவிசேஷமானது உச்சக்கட்டத்தை அடைகிறது என்பதைப் பார்க்கலாம். இதற்கு இணையாக, அப்போஸ்தலனாகிய பவுலின் ரோம் நோக்கிய பயணத்துடன், அவரது கைது, உபத்திரவம் மற்றும் துன்பங்களில் தொடங்கி, உலகின் ஏகாதிபத்திய வல்லமையின் தலைநகரில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வெற்றிகரமான அறிவிப்புடன் முடிவடைகிறது.

இது மட்டுமல்லாமல், இந்த இரு புத்தகங்களுக்கு இடையே ஒற்றுமைகள் உள்ளன, ஏனெனில் அவை ஒவ்வொன்றும் ஒரே கதையின் பகுதியாகும். லூக்காவின் சுவிசேஷத்தில் எழுப்பப்பட்ட எதிர்பார்ப்புகள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் வரை நிறைவேறாததை நாம் சிந்திக்கலாம். உதாரணமாக, லூக்கா சுவிசேஷ புத்தகத்தின் தொடக்கத்தில், உண்மையுள்ள சிமியோன் இயேசு புறஜாதிகளுக்கு வெளிச்சமாக இருப்பார் என்று அறிவித்தார். லூக்கா 2:30-32 இல் உள்ள அவருடைய வார்த்தைகளை கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது (லூக்கா 2:30-32).

லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் ஊழியம் தேவனின் இரட்சிப்பு மற்றும் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை விளக்குகிறது. ஆனால் அப்போஸ்தலருடைய நடபடிகளில் மட்டுமே தேவனின் இரட்சிப்பு குறிப்பிடத்தக்க வழிகளில் புறஜாதிகளுக்கு வெளிப்பாட்டின் ஒளியாக சேவை செய்வதைக் காண்கிறோம். இந்த ஒற்றுமைகள் இரண்டு படைப்புகளுக்கு இடையே ஒரு பொதுவான மீட்பு-வரலாற்று பார்வை மற்றும் நோக்கம் மற்றும் நம்பிக்கையின் பகிரப்பட்ட உணர்வை சுட்டிக்காட்டுகின்றன. இந்த ஒற்றுமைகள் நாம் ஒரு எழுத்தாளரின் படைப்புகளைப் பார்க்கிறோம் என்றும் கூறுகின்றன.

## ஆதி சபை

இப்போது நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் லூக்கா சுவிசேஷத்தில் உள்ள பொதுவான எழுத்தாளருக்கான சில சான்றுகளைப் பார்த்தோம், ஆரம்பகால சபை வரலாற்றில் வழங்கப்பட்ட சான்றுகளை பரிசீலிக்க நாம் தயாராக உள்ளோம். கி.பி இரண்டு முதல் நான்காம் நூற்றாண்டு வரை, பவுலின் பயணத் தோழரான லூக்கா தான் அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் லூக்காவின் சுவிசேஷம் இரண்டையும் எழுதியவர் என்று ஆரம்பகால சபை சாட்சியமளித்தது. இந்த ஆதாரத்தை இரண்டு வழிகளில் சுருக்கமாக ஆராய்வோம். முதலில், வேதாகமத்தினுடைய மற்றும் அதைப் பற்றிய ஆரம்பகால எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளைப் பார்ப்போம். இரண்டாவதாக, லூக்கா தான் எழுத்தாளர் என்பது பற்றி ஆரம்பகால சபை தலைவர்கள் என்ன எழுதினார்கள் என்பதைப் பார்ப்போம். சில பண்டைய கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரங்களை முதலில் பார்க்கலாம்.

### கையெழுத்துப் பிரதிகள்

பாப்பிரஸ்75 என குறிப்பிடப்படும் மிகப் பழைய கையெழுத்துப் பிரதி ஒன்று 1952 ஆம் ஆண்டு எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது பாப்பிரஸில் எழுதப்பட்டதாகவும் நமது ஆரம்பகால புதிய ஏற்பாட்டு கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. இது கி.பி.175 மற்றும் 200 க்கு இடையில் எப்போதாவது நகலெடுக்கப்பட்டிருக்கலாம், மேலும் இது லூக்காவின் சுவிசேஷம் மற்றும் யோவான் சுவிசேஷத்தின் பெரும் பகுதிகளை உள்ளடக்கியது. இரண்டு சுவிசேஷங்களின் உரைகளுக்கு இடையில் அவற்றின் உள்ளடக்கத்தின் இரண்டு விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. லூக்கா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷத்தின் முடிவிற்குப் பிறகு, கையெழுத்துப் பிரதியில் *"யுவாங்கலியோன் கடா லூகன்"* அல்லது "லூக்கா எழுதின சுவிசேஷம்" என்ற வார்த்தைகள் உள்ளன. இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து உடனடியாக "*யுவாங்கலியோன்* கடா ஐயோன்னன்" அல்லது "யோவான் எழுதின சுவிசேஷம் " என்ற வார்த்தை பயன்பாடு உள்ளது. இந்த அறிவிப்புகள் "லூக்காவின் சுவிசேஷம்" என்ற வார்த்தைகளுக்கு முந்தி வரும் காரியங்கள் லூக்காவின் சுவிசேஷமாக அடையாளம் காணப்பட்டது என்பதைக் குறிக்கிறது. லூக்கா மூன்றாவது சுவிசேஷத்தை எழுதினார் என்று ஆரம்ப காலத்திலிருந்தே நம்பப்பட்டது. இதற்கு இந்த கையெழுத்துப் பிரதி ஆதாரமாகும். மேலும், அது லூக்கா தான் அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியர் எனவும் சுட்டிக்காட்டுகிறது.

இரண்டாவதாக, கி.பி.170 முதல் 180 வரை தேதியிட்ட முராடோரியன் துண்டு, புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எவை என பட்டியலிடும் ஆரம்பகால ஆவணமாகும், இது ஆரம்பகால சபையின் நியமனம் என்று கருதப்பட்டது. லூக்கா சுவிசேஷத்தை லூக்கா தான் எழுதினார் என்பதை உறுதிப்படுத்திய பிறகு, அது அவரை அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியராகவும் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகிறது. 34 முதல் 36 வரையிலான வரிகளில் இந்த வார்த்தைகளைப் வாசிக்கிறோம்:

> மேலும், அனைத்து அப்போஸ்தலர்களின் செயல்களும் ஒரே புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன … லூக்கா தனது முன்னிலையில் நடந்த தனிப்பட்ட நிகழ்வுகளை தொகுத்தார்.

லூக்கா தான் அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியர் என்று பரவலாக நம்பப்பட்டது என்று இரண்டாம் நூற்றாண்டில் இந்த அறிக்கை கூறியது, மேலும் அதில் விவரிக்கப்பட்டுள்ள சில நிகழ்வுகளை அவர் நேரில் பார்த்தவாராயுமிருக்கிறார்.

மூன்றாவதாக, கி.பி.160 முதல் 180 வரை எழுதப்பட்ட மூன்றாவது சுவிசேஷத்தின் அறிமுகமான Anti-Marcionite Prologue, லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் படைப்புரிமையை கீழ்கண்டவாறு விவரிக்கிறது: 160 முதல் 180 வரை, லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் படைப்புரிமையை இவ்வாறு விவரிக்கிறது:

> பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட லூக்கா, இந்த சுவிசேஷம் முழுவதையும் இயற்றினார்… பின்னர் அதே லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகளையும் எழுதினார்.

இந்த ஆரம்ப கையெழுத்துப் பிரதி ஆதாரங்களுக்கு அப்பால், லூக்கா மூன்றாவது சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் ஆசிரியர் என்பதைக் குறிக்கும் ஆரம்பகால சபை தலைவர்களின் சாட்சியும் நம்மிடம் உள்ளது.

## ஆதி சபை தலைவர்கள்

கி.பி.130 முதல் 202 வரை வாழ்ந்த சபை பிதாவான ஐரேனியஸ், மூன்றாவது சுவிசேஷத்தின் ஆசிரியர் லூக்கா என்று நம்பினார். *Against Heresies*, புத்தகம் 3, அத்தியாயம் 1 பிரிவு 1, இல் அவர் இவ்வாறு எழுதினார்:

> பவுலின் தோழரான லூக்காவும் அவர் பிரசங்கித்த சுவிசேஷத்தை ஒரு புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தை பதிவு செய்த புத்தகம் என ஐரேனியஸ் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை இங்கு குறிப்பிட்டார். அவருடைய வார்த்தைகள் முக்கியமானவை, ஏனென்றால் லூக்காவினுடைய அப்போஸ்தலருடைய நடபடிகளின் படைப்பு பற்றிய நேரடி அறிவை ஐரேனியஸ் அணுகியதாக நல்ல வரலாற்று சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுமார் கி.பி.150 முதல் 215 வரை வாழ்ந்த அலெக்ஸாண்டிரியாவின் கிளமெண்ட்; அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் எழுத்தாளர் லூக்கா தான் என்றார். புத்தகம் 5, அவரது *ஸ்ட்ரோமாட்டாவின்* அத்தியாயம் 12, அல்லது இதர விஷயங்களில், அவர் இந்த வார்த்தைகளை எழுதினார்:

> அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்கா, பவுல், "ஏதென்ஸ் நகரவாசிகளே, நீங்கள் எல்லாவற்றிலும் மிகவும் மூடநம்பிக்கை கொண்டவர்கள் என்பதை நான் உணர்கிறேன்" என்று கூறியதாகக் குறிப்பிடுகிறார்.

கி.பி.155 முதல் 230 வரை வாழ்ந்த டெர்டுல்லியான், இந்த வார்த்தைகளை *Against Marcion* என்கிற தனது படைப்பில், புத்தகம் 4, அத்தியாயம் 2 இல் எழுதினார்:

> அப்போஸ்தலர்களில், யோவான் மற்றும் மத்தேயு முதலில் நமக்குள் விசுவாசத்தை விதைத்தார்கள் … லூக்காவும் மாற்குவும் பிறகு அதை புதுப்பிக்கிறார்கள்.

இங்கே, டெர்டுல்லியான் குறிப்பாக மூன்றாவது சுவிசேஷத்தை லூக்கா தான் எழுதினார் என்கிறார்.

இறுதியாக, கி.பி.323 இல் எழுதும் பெரிய சபை வரலாற்றாசிரியர் யசூபியஸ், அவரது *Ecclesiastical History* இன் புத்தகம் 1, அத்தியாயம் 5, பகுதி 3 இல் லூக்காவை அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியர் என்று குறிப்பிட்டார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> லூக்கா … அப்போஸ்தலருடைய நடபடிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வகையான உறுதியான அறிக்கைகளுக்கு மேலதிகமாக, லூக்காவைத் தவிர வேறு எவரும் மூன்றாம் சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதியதாக ஆரம்பகால திருச்சபையின் இலக்கியங்களில் எந்த அறிகுறியும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற துப்புகளின் காரணமாக, ஆரம்பகால திருச்சபை லூக்கா தான் எழுத்தாளர் என்பதைக் கண்டுபிடிக்கவில்லை, ஆனால் அது உண்மையாகப் பெற்றுக்கொண்டதை மற்றவர்களுக்கு பகிர்ந்தது. இந்த இரண்டு புத்தகங்களையும் லூக்கா தான் எழுதினார்.

## புதிய ஏற்பாடு

அப்போஸ்தலருடைய நடபடிகளுக்கும் மூன்றாவது சுவிசேஷத்திற்கும் எழுத்தாளர் ஒருவர் தான் என்பதற்கான சான்றுகளைப் பார்த்தோம். புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து லூக்காவைப் பற்றி என்னென்ன அனுமானங்களை எடுக்கலாம் என்று இப்போது பார்க்கலாம்.

இந்த ஆதாரத்தை இரண்டு வழிகளில் ஆராய்வோம். முதலில், நமது ஆசிரியரைப் பற்றி புதிய ஏற்பாட்டிலிருந்து நாம் பெறும் சில தகவல்களை கவனிப்போம். இரண்டாவதாக, இந்த தடயங்களை லூக்காவைப் பற்றிய தகவல்களுடன் ஒப்பிடுவோம். முதலில் நமது ஆசிரியரைப் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.

### தடயங்கள்

நாம் ஏற்கனவே கூறியது போல், அப்போஸ்தலருடய நடபடிகளின் எழுத்தாளர் தன்னை பெயரால் அடையாளப்படுத்தவில்லை. அவர் தனது புரவலர் தெயோப்பிலுவின் பொருட்டு தன்னைப் பெயரிட வேண்டிய அவசியமில்லை என்று உணர்ந்தார். லூக்கா 1:3 இல், ”எழுதுவது எனக்கும் நன்றாகத் தோன்றியது” என்றும், அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:1 இல், ”எனது முந்தைய புத்தகத்தில் … நான் எழுதினேன்” என்றும் அவர் வெறுமனே கூறினார். அவர் யார் என்பதை அவரது புரவலருக்குத் தெரியும் என்று எழுத்தாளர் கருதினார். இது தெயோப்பிலுவுக்கு எந்தப் பிரச்சனையையும் உருவாக்கவில்லை என்றாலும், நவீன வாசகர்களுக்கு இது பல கேள்விகளை உருவாக்கியுள்ளது.

அதே நேரத்தில், புதிய ஏற்பாடு நம் எழுத்தாளரைப் பற்றி நமக்குச் சொல்லும் பல விஷயங்கள் உள்ளன. முதலில், அவர் ஒரு அப்போஸ்தலன் அல்ல. உண்மையில், இயேசு பரலோகத்திற்கு போன பிறகு அவர் விசுவாசத்திற்குள் வந்திருக்கலாம். லூக்கா 1:1-2 லிருந்து இந்த விவரங்களைக் கவனியுங்கள்:

> மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டார்கள். (லூக்கா 1:1-2).

இயேசுவினுடைய வாழ்க்கையின் நிகழ்வுகள் நமக்குக் கொடுக்கப்பட்டவை என்று ஆசிரியர் கூறியபோதும், அவர் இயேசுவின் வாழ்க்கையை நேரில் கண்ட சாட்சி அல்ல என்று சுட்டிக்காட்டினார்.

இரண்டாவதாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் லூக்காவின் சுவிசேஷத்தில் உள்ள கிரேக்க பாணி, ஆசிரியர் நன்கு படித்தவர் என்பதைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள பல புத்தகங்கள் கிரேக்க மொழியில் மிகவும் பொதுவான பாணியில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் லூக்காவின் சுவிசேஷமும் அப்போஸ்தலருடைய நடபடிகளும் மொழியைப் பயன்படுத்துவதில் அதிக நுட்பத்தைக் காட்டுகின்றன.

மூன்றாவதாக, அப்போஸ்தலருடைய நடபடிகளின் இரண்டாம் பாதி, எழுத்தாளர் பவுலின் நெருங்கிய பயணத் தோழர்களில் ஒருவர் என்பதைக் குறிக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆரம்ப அத்தியாயங்களில், கதைகள் மூன்றாம் நபரில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அப்போஸ்தலருடைய நடபடிகள் 16 இல் தொடங்கி, "நாங்கள்" மற்றும் "எங்களுக்கு" போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி, கதை பெரும்பாலும் முதல் நபரின் முன்னோக்கைப் பெறுகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:10-17; 20:5-15; 21:1-18 மற்றும் 27:1-28:16 இல் இந்த வகையான மொழியைக் காண்கிறோம். பவுலின் பிற்கால மிஷனரி பயணங்களிலும், செசரியாவிலிருந்து ரோமுக்கு சென்ற பவுலின் பயணத்திலும் எழுத்தாளர் பவுலுடன் சென்றதாக இந்தப் பகுதிகள் குறிப்பிடுகின்றன.

இப்போது நம்மிடம் ஆசிரியரைப் பற்றி சில தடயங்கள் இருப்பதால், இந்த விவரங்கள் லூக்காவைப் பற்றி நாம் அறிந்தவற்றுடன் எவ்வளவு நன்றாக ஒத்துப்போகிறது என்பதைப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

## லூக்கா

லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியரைப் பற்றி நாம் அறிந்த விஷயங்களை மீண்டும் ஒருமுறை பார்ப்போம்: முதலில், அவர் ஒரு அப்போஸ்தலன் அல்ல. அவர் நன்றாகப் படித்தவராகத் தெரிகிறது. மேலும் அவர் பவுலின் பயணத் துணையாக இருந்தார். இந்த விவரங்கள் லூக்காவைப் பற்றி நமக்குத் தெரிந்தவற்றுடன் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன?

சரி, முதலில், லூக்கா ஒரு அப்போஸ்தலன் அல்ல. அப்போஸ்தலர்கள் சபைக்கான அடித்தளத்தில், கிறிஸ்துவின் சார்பாக சபையை நிறுவுவதற்கும், தவறான உபதேசம் மற்றும் பிரச்சனையிலிருந்து அதைப் பாதுகாப்பதற்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தினர். அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:21-22 இன் படி, அப்போஸ்தலர்கள் இயேசுவினால் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஆனால் லூக்கா ஒருபோதும் இயேசுவை நேரில் சந்திக்கவில்லை, அப்போஸ்தலர்களுக்குரிய அதிகாரத்தை ஒருபோதும் கோரவில்லை. மாறாக, அவர் வெறுமனே பவுலின் மிஷனரி முயற்சிகளுக்கு உண்மையுள்ள ஆதரவாளராக இருந்தார். அவர் ஒரு அப்போஸ்தலரின் வேலைக்காரராக இருந்தார், அல்லது பவுல் அவரை பிலேமோன் வசனம் 24 இல் விவரித்தது போல், ஒரு அப்போஸ்தலரின் ”உடன் வேலையாள்” ஆவார்.

இரண்டாவதாக, லூக்கா நன்கு படித்தவராக இருக்கலாம். கொலோசெயர் 4:14 இலிருந்து இதை ஊகிக்க முடியும், அங்கு பவுல் லூக்காவை ஒரு மருத்துவர் என்று அடையாளம் காட்டினார். புதிய ஏற்பாட்டின் நாட்களில் மருத்துவம் என்பது ஒரு முறையான படிப்பாக இல்லாவிட்டாலும், அதிக திறமை மற்றும் கற்றல் பட்டம் கொண்ட நபர்களே அதில் ஈடுபட முடியும்.

மூன்றாவதாக, லூக்கா பவுலின் பயணத் துணையாக இருந்தார். கொலோசெயர் 4:14; 2 தீமோத்தேயு 4:11; மற்றும் பிலேமோன் வசனம் 24 இல் லூக்கா தன்னுடன் பயணித்ததாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டார்.

அப்போஸ்தலருடைய நடபடிக்களுக்கான ஆசிரியர் குறித்த காரியத்தை நாம் இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம். அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியர் லூக்கா தான் என்பதை சுட்டிக்காட்டும் ஏராளமான வரலாற்று சான்றுகள் உள்ளன. லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளுக்கு ஒரு பொதுவான ஆசிரியர் உண்டு. ஆரம்பகால சபையின் சான்றுகள் லூக்கா தான் எழுத்தாளர் என்பதற்கு காரணம் கூறுகின்றன. மேலும் வேதாகமத் தகவல்கள் இந்தக் கருத்துடன் ஒத்துப்போகின்றன. இந்த ஆதாரங்களின் வெளிச்சத்தில், மூன்றாவது சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டையும் எழுதியவர் லூக்கா என்று நம்புவதற்கு நமக்கு நல்ல காரணம் இருக்கிறது. அவர் விவரித்த விஷயத்திற்கு லூக்கா சிறந்த அணுகலும் அருகாமையும் கொண்டிருந்தார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

# வரலாற்று அமைப்பு

இப்போது நாம் லூக்கா தான் ஆசிரியர் என்பதை குறித்துப் பார்த்தோம், அப்போஸ்தலருடைய நடபடிகளின் வரலாற்று அமைப்பைப் பார்க்கப் போகிறோம். லூக்கா எப்போது எழுதினார்? மேலும் அவர் தனது புத்தகத்தை யாருக்காக இயற்றினார்?

அப்போஸ்தலருடைய நடபடிகளின் வரலாற்று அமைப்பை நாம் ஆராயும்போது, மூன்று தலைப்புகளைப் பார்ப்போம். முதலாவதாக, லூக்கா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எப்போது எழுதினார் என்ற கேள்வியைத் தொடர்ந்து, அப்போஸ்தலருடைய நடபடிகளின் தொகுப்பின் தேதியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, புத்தகத்தின் அசல் வாசகர்களை ஆராய்வோம். மூன்றாவதாக, வாசகர்களின் சமூக சூழலை ஆராய்வோம். இந்த விஷயங்களைப் பார்ப்பது, விவரிக்கப்பட்ட நிகழ்வுகளுக்கு லூக்கா எந்த அளவுக்கு எழுத்தாளராக பொருந்துகிறார் என்பதை தெளிவுபடுத்த உதவும். கி. பி. முதல் நூற்றாண்டில் சுவிசேஷம் ஏற்படுத்திய தாக்கத்தை ஆழமாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ளவும் இது உதவும். புத்தகம் எழுதப்பட்ட தேதியை முதலில் பார்க்கலாம்.

## தேதி

அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் முதன்முதலில் எப்போது எழுதப்பட்டது என்பதில் பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும், பொதுவாக, புதிய ஏற்பாட்டு அறிஞர்களின் கருத்துக்களை இரண்டு அடிப்படை நோக்குநிலைகளாகப் பிரிக்கலாம். ஒருபுறம், கி.பி.70 இல் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்ட பிறகு லூக்கா இதை எழுதினார் என்று சிலர் வாதிட்டனர். மறுபுறம், கி.பி.70 இல் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டதற்கு முன்பு லூக்கா இதை எழுதினார் என்று சிலர் வாதிட்டனர். கி. பி.70 இன் சோகமான நிகழ்வுகள் யூத வரலாற்றில் முக்கியமானவை, இந்த காரணத்திற்காக இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் இந்த விஷயங்களைப் பற்றிய கருத்துக்களை சிந்திக்க உதவியாக இருக்கும். கி.பி.70 க்குப் பிறகு லூக்கா எழுதிய சாத்தியத்தில் தொடங்கி, இந்தக் கண்ணோட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

### கி. பி.70 க்குப் பிறகு அப்போஸ்தலருடைய நடபடிகள்

கி. பி.70 க்குப் பிறகு எழுதப்பட்டதாகக் கருதும் அறிஞர்கள் பல கருத்தில் தங்கள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் கி.பி.80 முதல் 90 வரையிலான தேதியைக் குறிக்கிறது என்று பலர் கூறுகின்றனர். இந்த பார்வையில், ஆரம்பகால சபையைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்க மிகவும் சாதகமானதாக இருக்கிறது. அப்படி இல்லையென்றால், ஆரம்பகால சபையைப் பற்றிய நிகழ்வுகளிலிருந்து இந்த புத்தகம் பல வருடங்கள் பிரிந்திருக்க வேண்டியதாயிருக்கும். ஆனால் இந்த பார்வை, சபைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அனைத்து வகையான பிரச்சனைகளையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் கையாளும் நிதானமான வழியைக் கவனிக்கவில்லை.

பெரும்பாலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் கி.பி.70 க்குப் பிறகு எழுதப்பட்டதாக நம்புபவர்கள், இந்த புத்தகத்தில் உள்ள சில விஷயங்கள் யூத



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சரித்திராசிரியரான ஜோசிஃபஸின் படைப்புகளைச் சார்ந்தது என்று அவர்கள் நம்புவதால் அவ்வாறு செய்கிறார்கள்.

ஜோசிஃபஸின் தொடர்புடைய எழுத்துக்கள் கி. பி.79 க்கு முன்னதாகவே இயற்றப்பட்டவை அல்ல, மேலும் கி. பி.85 க்கு முன்பே பரவலாகக் கிடைத்திருக்காது. எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகள் ஜோசிஃபஸின் படைப்புகளைச் சார்ந்தது என்று நம்புபவர்கள், இது கி. பி.79 க்கு முந்தையதாகவும், கி. பி.85 க்குப் பிறகும் எழுதப்பட்டதாகவும் முடிவு செய்கின்றனர்.

இந்த நிலைப்பாட்டை ஆதரிப்பவர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளுக்கும் ஜோசிபஸின் படைப்புகளுக்கும் இடையே உள்ள பல தொடர்புகளை சுட்டிக்காட்டியிருந்தாலும், அவர்கள் குறிப்பிட்டுள்ள நான்கு தொடர்புகளை மட்டும் நாம் தொடுவோம்.

முதலாவதாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:36 யூத புரட்சியாளரான தியூடாஸைக் குறிக்கிறது, அவர் ஜோசிஃபஸின் *Antiquities* என்கிற புத்தகத்தின் 20வது பிரிவு 97 இல் குறிப்பிடப்பட்டிருக்கலாம். இரண்டாவதாக, ஜோசிபஸின் *Jewish Wars* என்னும் புத்தகம் 2, பிரிவுகள் 117 மற்றும் 118, மற்றும் புத்தகம் 18 இல், அவரது *Antiquities* இல் 1 முதல் 8 வரையிலான பிரிவுகளில் வரும் கலிலேயாவைச் சேர்ந்த புரட்சியாளர் யூதாஸ் பற்றி அப்போஸ்தலர் 5:37 குறிப்பிடுகிறது. மூன்றாவதாக, அப்போஸ்தலர் 21:38 இல் உள்ள எகிப்தியன் என்று அழைக்கப்படும் புரட்சியாளர் ஜோசிபஸின் *Jewish Wars* என்னும் புத்தகம் 2, பிரிவுகள் 261 முதல் 263 வரை மற்றும் அவரது *Antiquities* புத்தகம் 20, பிரிவு 171 ஆகியவற்றிலும் தோன்றலாம். நான்காவதாக, பல வியாக்கியான அறிஞர்கள் ஏரோதுவின் மரணம் பற்றிய விளக்கத்தை அப்போஸ்தலருடைய நடபடிகள் 12:19-23 ஜோசிஃபஸின் *Antiquities* இல் புத்தகம் 19, 343 முதல் 352 வரையிலானதை சார்ந்துள்ளது என்று வாதிட்டனர்.

இப்படிப்பட்ட சிந்தனை கொண்டுள்ள வியாக்கியான அறிஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் ஜோசிஃபஸின் எழுத்துக்களுக்கு இடையிலான ஒற்றுமைகள், அப்போஸ்தலருடைய நடபடிகள் ஜோசிஃபஸின் படைப்புகளைச் சார்ந்தது என்பதை நிரூபிக்கவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். உண்மையில், அப்போஸ்தலருடைய நடபடிகளில் உள்ள நிகழ்வுகளின் விளக்கங்கள் ஜோசிஃபஸின் விளக்கங்களிலிருந்து வேறுபடுகின்றன. எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் ஜோசிஃபஸின் படைப்பு நன்கு அறியப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை தனித்தனியாக விவரித்திருக்கலாம் அல்லது பொதுவான ஆதாரங்களைச் சார்ந்து இருந்திருக்கலாம். அங்கே குறிப்பிடப்பட்டவர்கள் ஒப்பீட்டளவில் நன்கு அறியப்பட்ட வரலாற்று நபர்கள் என்பதால், அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பதிவுகளில் நினைவுகூரப்படுவதில் ஆச்சரியமில்லை. இதை விட, தியூடாஸ் விஷயத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் மிகவும் பொதுவான பெயரைக் கையாளுகிறோம். ஒரே பெயரில் இரண்டு தனித்தனி நபர்கள் இருந்திருக்கவும் வாய்ப்புண்டு.

## கி.பி.70க்கு முன்

அப்போஸ்தலருடைய நடபடிகளின் தேதி குறித்த இரண்டாவது முக்கிய கருத்து என்னவென்றால், இது கி.பி.70 இல் தேவாலயம் இடிக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டது என்பதாகும். இந்த முந்தைய தேதிக்கு ஆதரவாக பல சான்றுகள் உள்ளன, ஆனால் நம் நோக்கங்களுக்காக அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் கடைசி காட்சியிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வரலாம் என்பதில் கவனம் செலுத்துவோம்.

அப்போஸ்தலர் 28:30-31 இல் உள்ள கடைசி இரண்டு வசனங்களைக் கவனியுங்கள். பவுலைப் பற்றி லூக்கா இந்த வார்த்தைகளை எழுதினார்:

> பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான் (அப் 28:30-31).

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் ரோமில் வீட்டுக்காவலில் இருந்து கிறிஸ்தவ சுவிசேஷத்தை தைரியமாக அறிவித்த பவுலுடன் முடிவடைகிறது. இந்த முடிவுரை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் கி.பி.70 க்கு முன் எழுதப்பட்டது என்று நம்புவதற்கு முக்கியமான ஆதாரங்களை வழங்குகிறது.

முதலாவதாக, பவுலின் ஊழியத்தைப் பற்றிய லூக்காவின் விளக்கம், கி.பி.64 இல் நடந்த ஒரு முக்கியமான நிகழ்வில் நின்றுவிடுகிறது. கி.பி.64 இல், நீரோ ரோமில் பேரழிவை ஏற்படுத்திய நெருப்புக்கு கிறிஸ்தவர்களைக் குற்றம் சாட்டி, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். லூக்கா, அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதும் நேரத்தில் அது ஏற்கனவே நிகழ்ந்திருந்தால், இதுபோன்ற ஒரு பெரிய திருப்பத்தை குறிப்பிடாமல் இருப்பது விந்தையாக இருக்கும்.

இரண்டாவதாக, நீரோ சபையைத் துன்புறுத்தியபோது, அநேகமாக கி.பி.65 அல்லது அதற்குப் பிறகு, பவுல் பொதுவாக இரத்த சாட்சியாக மரித்ததாக கருதப்படுகிறார். இதற்குப் பிறகு அப்போஸ்தலருடைய நடபடிகள் எழுதப்பட்டிருந்தால், புத்தகத்தின் மிக முக்கியமான பாத்திரங்களில் ஒருவரான பவுல் இரத்த சாட்சியாக மரித்ததை அது நிச்சயமாகக் குறிப்பிட்டிருக்கும்.

மூன்றாவதாக, கி.பி.70 இல் எருசலேமில் உள்ள யூத ஆலயம் அழிக்கப்பட்டபோது, அது சபையில் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இடையிலான உறவுகளை கணிசமாக பாதித்தது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் பல இடங்களில் இந்த உறவுகளை மையமாகக் கொண்டுள்ளது. எனவே, தேவாலயம் அழிக்கப்பட்டிருந்தால் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் அதைத் தவிர்த்திருக்க வாய்ப்பில்லை.

இது போன்ற உண்மைகளின் வெளிச்சத்தில், லூக்கா பவுல் சிறையில் அடைக்கப்பட்ட நேரம் மற்றும் கி.பி.60 முதல் 62 வரை ரோமில் ஊழியம் செய்த காலக்கட்டத்தில் அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதி முடித்தார் என்று முடிவு செய்வது சிறந்தது. இது புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசி வரலாற்று விவரமாகும்.

## முதல் வாசகர்கள்

அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆரம்ப தேதியை மனதில் கொண்டு, அப்போஸ்தலர்களின் வரலாற்று அமைப்பின் இரண்டாவது அம்சமான லூக்கா எழுதியவைகளின் அசல் வாசகர்களுக்கு நாம் திரும்ப வேண்டும். லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் மூலமாக தான் சொல்ல விரும்பிய செய்தியை கேட்கும் வாசகர்களைக் குறித்த விழிப்புணர்வு அவரது புத்தகங்களைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானது.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் அசல் வாசகர்களை இரண்டு வழிகளில் ஆராய்வோம். முதலில், தெயோப்பிலுவுக்கு இந்த புத்தகம் ஒப்படைக்கப்பட்டதைக் குறித்து பார்ப்போம். இரண்டாவதாக, புத்தகம் ஒரு பரந்த வாசகர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கருத்தில் கொள்வோம். லூக்காவின் முதல் வாசகரான தெயோப்பிலுவுடன் ஆரம்பிக்கலாம்.

### தெயோப்பிலு

லூக்காவை  எழுதுவதற்காக நியமித்தது தெயோப்பிலு என்பதை லூக்காவின் முன்னுரைகள் தெரிவிக்கின்றன. நாம் பார்த்தபடி, லூக்கா 1:3 மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:1 இல், லூக்கா தனது படைப்புகளை தெயோப்பிலுவுக்கு அர்ப்பணித்தார். இதுமட்டுமல்லாமல், லூக்கா 1:3 இல் லூக்கா தெயோப்பிலுவை கனம் பொருந்தியவர் என்று அழைத்தார். லூக்கா "மிகச் சிறந்த" (அல்லது கிரேக்கத்தில் *க்ராடிஸ்டோஸ்*) என்ற வார்த்தையை மரியாதையின் வெளிப்பாடாகப் பயன்படுத்தினார். தெயோப்பிலு அவருடைய செல்வந்த புரவலர் என்று பலர் நம்புவதற்கு இந்தச் சொல் வழிவகுத்தது.

ஆனால் லூக்காவுக்கும் தெயோப்பிலுவுக்கும் இடையிலான உறவு புரிந்து கொள்ளக் கடினமான ஒன்று. லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகங்களைப் படிப்பதன் மூலம், தெயோப்பிலு லூக்காவின் மாணவரானார். லூக்கா சுவிசேஷத்தின் முன்னுரையில் தெயோப்பிலு மற்றும் லூக்கா ஆகிய இருவரின் உறவின் இந்த அம்சத்தைப் பார்க்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லூக்கா 1:3-4 இல் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:3-4).

இந்த வேத பகுதியில் குறிப்பிடுவது போல, லூக்காவின் புத்தகம் ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்டது, இதனால் தெயோப்பிலு தான் கற்பிக்கப்பட்ட விஷயங்களின் உறுதியை அறிந்து கொள்வார். எளிமையாகச் சொல்வதானால், தெயோப்பிலுவுக்கு அறிவுறுத்துவதற்காக லூக்கா எழுதினார்.

லூக்கா தனது முதல் வாசகரான தெயோப்பிலுவுக்கு எழுதுகிறதைப் பார்த்த பிறகு, லூக்கா பரந்த வாசகர்களுக்கு எழுதுவதைப் பற்றி சிந்திக்கவும் இது உதவியாக இருக்கும்.

## பரந்த வாசகர்கள்

புதிய ஏற்பாட்டில் வேறு இடங்களில் நாம் படித்தவற்றிலிருந்து, முதல் நூற்றாண்டில் பரந்து இருந்த திருச்சபை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் லூக்கா குறிப்பிட்ட பல பிரச்சனைகளுடன் போராடியது என்பதைக் காண்பது கடினம் அல்ல. லூக்காவின் சரித்திரம் யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளுக்கு இடையேயான சச்சரவுகளையும், வெவ்வேறு அப்போஸ்தலர்கள் மற்றும் போதகர்களின் தலைமையின் கீழ் இருந்த பிளவுகளையும் குறிப்பிடுகிறது. அவரது பதிவு கள்ள போதகர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கோட்பாட்டுப் பிழைகளைத் தொடுகிறது. சபை மற்றும் உள்நாட்டு அரசாங்கங்களுக்கு இடையேயான சண்டைகளையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் குறிப்பிடுகின்றது. இது பெண்கள் மற்றும் ஏழைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் கவனம் செலுத்துகிறது. இது துன்புறுத்தல்கள், துன்பங்கள் மற்றும் சிறைவாசங்களைப் பதிவு செய்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இந்த வகையான கோட்பாடு, தார்மீக மற்றும் நடைமுறை சிக்கல்களைத் தொடுகின்றது, ஏனெனில் பரந்த சபை அதன் ஆரம்ப தசாப்தங்களில் இந்த வகையான பிரச்சனைகளுடன் போராடியது.

லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை மிகவும் பரந்த பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய எழுதியதால், அவர் தனது புத்தகத்தை பல்வேறு விசுவாசிகள் படிக்க வேண்டும் என்று கருதினார் என்று நினைப்பது நியாயமானது. தெயோப்பிலு மற்றும் ஆரம்பகால சபை அவர்கள் எதிர்கொள்ளும் பல சவால்களை பெரிய அளவில் கையாள்வதில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# சமூக சூழல்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் தேதி மற்றும் அசல் வாசகர்களைக் கருத்தில் கொண்டு, மூன்றாவது பிரச்சனையைத் தீர்க்க நாம் தயாராக உள்ளோம், அவையாவன: லூக்கா சுவிசேஷத்தின் பொதுவான சமூக சூழல், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் எழுதப்பட்ட உலகம். லூக்காவின் காலத்தில் செயல்பட்ட சமூக சக்திகளைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாகப் புரிந்து கொள்ள முடியுமோ, அவ்வளவு சிறப்பாக அவருடைய புத்தகத்தின் பல அம்சங்களைப் புரிந்துகொள்ள நாம் தயாராக இருப்போம்.

முதல் நூற்றாண்டு சபையில் வாழ்க்கையின் இரண்டு மைய அம்சங்களைப் பார்த்து, அப்போஸ்தலருடைய நடபடிகளின் சமூக சூழலை ஆராய்வோம்: முதலில், ரோமப் பேரரசின் ஆட்சி மற்றும் அதிகாரம்; இரண்டாவதாக, சபைக்கும் யூதர்களுக்கும் இடையிலான புதிய உறவு. முதலில் ரோமப் பேரரசைப் பற்றிப் பார்ப்போம்.

## ரோமப் பேரரசு

லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதிய நேரத்தில், ரோமப் பேரரசு முழு மத்திய தரைக்கடல் உலகத்தையும் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது, மேலும் இன்றைய பிரிட்டன், வட ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகள் வரை அதன் எல்லையை விரிவுபடுத்தியது. ஆரம்பகால சபையின் நாட்களில், பேரரசு இன்னும் வளர்ந்தது, மேலும் மேலும் மக்களையும் பிரதேசங்களையும் அதன் களத்தில் சேர்த்தது. அவ்வாறு செய்ததால், ரோமப் பேரரசு அதன் தனித்துவமான ரோம மதிப்புகள், குறிக்கோள்கள் மற்றும் நம்பிக்கைகளுடன் சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் ஆழமாக பாதித்தது.

சந்தேகத்திற்கு இடமின்றி, கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ரோம் கொண்டிருந்த மிகப்பெரிய தாக்கங்கள் அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகும். ரோமப் பேரரசின் முக்கிய அரசியல் அக்கறைகளில் ஒன்று, உள்ளூர் அதிகாரிகளின் மீது வலிமையான கட்டுப்பாட்டைச் செலுத்துவதன் மூலம் பேரரசுக்குள் அமைதி மற்றும் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகும்.

கைப்பற்றப்பட்ட நாடுகளுக்கு உள்ளூர் சுயாட்சியின் அளவு அனுமதிக்கப்பட்டது, ஆனால் அவற்றின் உள்ளூர் அரசாங்கங்கள் பெரும்பாலும் மறுகட்டமைக்கப்பட்டன. உதாரணமாக, செசரியாவின் இரண்டு ரோம ஆளுநர்களை அப்போஸ்தலருடைய புத்தகம் குறிப்பிடுகிறது, அதாவது பேலிக்ஸ் மற்றும் பெஸ்து, அவர்கள் யூதேயா முழுவதையும் செசரியாவிலிருந்து ஆண்டார்கள். வரிவிதிப்பை மேற்பார்வையிடுவதோடு மட்டுமல்லாமல், ரோமப் பேரரசின் தங்கள் பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் பராமரிப்பதும் அவர்கள் பொறுப்பாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ரோம குடிமக்களை கைப்பற்றிய நாடுகளின் மக்கள்தொகையை ஒருங்கிணைப்பதன் மூலம் பேரரசு கலாச்சார மற்றும் அரசியல் செல்வாக்கையும் செலுத்தியது.

பெரும்பாலும், ரோம் புதிதாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஓய்வுபெறும் இராணுவப் படைகளுக்கு நிலத்தை வழங்கியது. இந்த நடைமுறையானது முழுப் பேரரசு முழுவதும் விசுவாசமான ரோம குடிமக்கள் குடியேற வழிவகுத்தது, மேலும் உத்தியோகபூர்வ மற்றும் சமூக அமைப்புகளில் ரோமின் மதிப்புகள் மற்றும் அர்ப்பணிப்புகளை மேம்படுத்தியது. இதனால்தான் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் ரோமில் இருந்து வந்தவர்களை அவ்வப்போது குறிப்பிடுகிறது. பெந்தெகொஸ்தே நாளிலேயே, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:10-11 இல் “ரோமிலிருந்து வருகை தந்தவர்கள் (யூதர்கள் மற்றும் யூத மதத்திற்கு மாறியவர்கள்)” என்று வாசிக்கிறோம். மீண்டும், அப்போஸ்தலருடைய நடபடிகள் 10-ல் உள்ள தேவ-பயமுள்ள ரோமை சேர்ந்த நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியு, அப்போஸ்தலர்களில் சுவிசேஷத்தைப் பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

இதற்கு அப்பால், உள்ளூர் கலாச்சாரங்கள் ரோமின் பொதுப் பணிகளான சாலைகள், விரிவான கட்டிடங்கள் மற்றும் பொது சந்திப்பு இடங்கள் போன்றவற்றால் தாக்கத்திற்கு உள்ளாயின. ரோம ஆட்சியின் இந்த அம்சம், பவுலும் மற்றவர்களும் தங்கள் மிஷனரி முயற்சிகளில் எப்படி சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் பயணம் செய்தார்கள் என்பதை விளக்குகிறது. அப்போஸ்தலர்களும் இந்த பொது இடங்களைப் பயன்படுத்தி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

ஆரம்பகால சபைக்கு ரோமப் பேரரசின் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால் அது வென்ற மக்களின் மதங்களில் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியதேயாகும்.

லூக்கா எழுதும் நேரத்தில், ராயன் என்கிற ஒரு மனிதன் முழு ரோமப் பேரரசின் மையத்தில் நின்றான். பேரரசர் அல்லது ராயன் தனது மக்கள் மற்றும் சாம்ராஜ்யத்தின் அதிபதியாக மட்டும் பார்க்கப்படவில்லை, மக்களின் இரட்சகராகவும் பார்க்கப்பட்டார். ரோம பிரச்சாரத்தின்படி, ராயர்கள் தங்கள் மக்களை குழப்பம் மற்றும் இருளில் இருந்து விடுவித்தனர். ரோமப் பேரரசின் விரிவாக்கம் அவனது இரட்சிப்பின் நீட்டிப்பாக வழங்கப்பட்டது, மக்களை அவர்களின் உள்ளூர் மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவித்து, அனைவரையும் ரோமின் கருணைமிக்க ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது.

பெரும்பாலான இடங்களில், கைப்பற்றப்பட்ட மக்கள் தங்கள் சொந்த மத நடைமுறைகளைத் தொடர அனுமதிக்கப்பட்டனர், ஆனால் அவர்கள் ராயன் மற்றும் பாரம்பரிய ரோம தேவர்களின் மேன்மையை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. இப்போது, பல அம்சங்களில், முதல் நூற்றாண்டில் பெரும்பாலான யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ரோமின் கனத்திற்குரிய குடிமக்களாக இருந்தனர், ஆனால் உண்மையுள்ள யூதர்களும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்தவர்களும் ரோம மதத்தின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். ரோமப் பேரரசு யூத நம்பிக்கையை ஒரு *அனுமதிக்கப்பட்ட மதம்* அல்லது "சட்டரீதியான மதம்" என்று நியமித்தது, மேலும் அது கிறிஸ்தவ நம்பிக்கையை முடிந்தவரை பொறுத்துக்கொண்டது. மேலும் அது இன்னும் இரு குழுக்களையும் அடக்கியது.

அரசாங்கம், மக்கள்தொகை, பொதுப்பணி மற்றும் மதம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் மூலம், ரோம் தனது செல்வாக்கை தன்னால் இயன்ற எல்லா இடங்களிலும் பரப்ப முயன்றது.

இப்போது ரோமப் பேரரசின் தாக்கங்களின் அடிப்படையில் அப்போஸ்தலருடைய நடபடிகளின் சமூக சூழலைப் பார்த்தோம், லூக்கா எழுதிய சமூக சூழ்நிலையின் மற்றொரு முக்கியமான பரிமாணமான விசுவாசியாத யூதர்களுக்கும் ஆரம்பகால கிறிஸ்தவ சபைக்கும் இடையிலான உறவை ஆராய நாம் தயாராக உள்ளோம்.

## யூதர்கள்

யூதர்களுக்கும் ஆரம்பகால சபைக்கும் இடையே உள்ள உறவையும் அவர்களுக்கு இடையே உள்ள ஆழமான தொடர்பையும் கவனிப்போம், இரண்டாவதாக அவர்களின் அடிப்படை வேறுபாடுகளை ஆராய்வோம். இந்த இரண்டு குழுக்களுக்கும் இடையிலான தொடர்பை முதலில் பார்ப்போம்.

ஆரம்பகால சபை யூத மக்களுடன் ஒரு பொதுவான பாரம்பரியத்தை பகிர்ந்து கொண்டது. இயேசு ஒரு யூதர், அப்போஸ்தலர்கள் அனைவரும் யூதர்கள், மற்றும் முதலில், சபையிலும் முழுக்க முழுக்க இரட்சிக்கப்பட்ட யூதர்கள் தான் இருந்தார்கள் என்ற உண்மையை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். எனவே, ஆரம்பகால சபையின் மனதில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட யூத மேசியாவிடம் விசுவாசம் வைத்தல் என்பது யூத மதத்திலும் ஒரு குறிப்பிட்ட விசுவாசத்தை வைக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது என்பதில் ஆச்சரியமில்லை.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின்படி, ஆரம்பகால சபையில் பலர் சபை ஆராதனையில் கலந்துகொண்டனர், வேதவசனங்களைக் கேட்பதற்காக ஜெப ஆலயங்களில் கூடினர், மேலும் பல யூத பழக்கவழக்கங்களை ஆசரித்தார்கள். உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:32-33 இல் உள்ள பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:32-33).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பவுலும் அவருடன் பயணித்தவர்களும் ஜெப ஆலயத்தில் உள்ள யூதர்களுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர், முற்பிதாக்கள் ”எங்கள் பிதாக்கள்” என்றும் கிறிஸ்தவர்களை தங்கள் குழந்தைகள் என்றும் பேசினார்கள்.

கூடுதலாக, ஆரம்பகால சபை மற்றும் யூத சமூகம் இரண்டும் ஒரே வேதவசனங்களுக்கு  அர்ப்பணித்திருக்கின்றன. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், கிறிஸ்தவர்கள் யூத சூழல்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும் போது தொடர்ந்து வேதவசனங்களை சுட்டிக்காட்டினார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:1-3, யூதர்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்கும் போது பவுல் எப்படி வேதாகமத்திற்கு திரும்பினார் என்று பதிவு செய்கிறது. லூக்காவின் வார்த்தைகளைக் கேளுங்கள்:

> அவர்கள் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெபஆலயம் இருந்தது. பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான் (அப் 17:1-3).

இதற்கு அப்பால், கிறிஸ்தவத்திற்கும் யூத மதத்திற்கும் இடையிலான ஆழமான தொடர்பு யூத அதிகாரிகளுக்கும் ஆரம்பகால சபைக்கும் இடையே குறிப்பிடத்தக்க தொடர்புகளை ஏற்படுத்தியது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின்படி, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதில் ஆரம்பகால சபையின் தைரியம் யூத அதிகாரிகளுடன் அடிக்கடி மோதலுக்கு வழிவகுத்தது. ஆனால் முடிந்தவரை, ஆரம்பகால கிறிஸ்தவர்கள் யூதத் தலைவர்களை ஒப்புக்கொண்டனர் மற்றும் தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதபடி கட்டளையிட்டபோது மட்டுமே அவர்களை எதிர்த்தனர்.

யூத மக்களுக்கும் ஆரம்பகால சபைக்கும் இடையே ஆழமான தொடர்பு இருந்தபோதிலும், அவர்கள் இன்னும் அடிப்படை வேறுபாடுகளால் வேறுபடுத்தப்பட்டனர்.

மிக அடிப்படையாக, கிறிஸ்தவர்களும் அவிசுவாசியான யூதர்களும் இயேசுவோடு உடன்படவில்லை. இயேசு மரணத்தை வென்று, மரித்தோரிலிருந்து தம்முடைய சொந்த உயிர்த்தெழுதலில் தொடங்கி, அனைத்து சிருஷ்டிகளையும் மீட்டெடுக்கும் மேசியா என்று சபை அறிவித்தது. ஆனால், அவிசுவாசியான யூதர்கள், குற்றவாளியாக சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக இருக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முடியாது என்று கருதினர். இந்த வேறுபாடு கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர் அல்லாத யூதர்களுக்கும் இடையே ஒரு பிளவை உருவாக்கியது, அது நம் சொந்த நாளிலும் தொடர்கிறது.

இரண்டாவதாக, ஆரம்பகால சபைகளும் யூதத் தலைவர்களும் எபிரெய வேதாகமத்தின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டபோது, எபிரெய வேதாகமத்தின் சரியான விளக்கத்தில், குறிப்பாக இயேசுவைப் பொறுத்தவரை அவர்கள் கடுமையாக உடன்படவில்லை. வரவிருக்கும் மேசியாவின் எபிரெய வேதாகமத்தின் நம்பிக்கைகள் இயேசுவில் நிறைவேறியதாக ஆரம்பகால சபை நம்பியது, ஆனால் விசுவாசமில்லாத யூதர்கள் இந்த புரிதலை மறுத்தனர். யூத மதத்திற்குள் பல தரப்பினர் பரந்த அளவிலான கருத்துக்களைக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்களில் பெரும்பாலோர் பழைய ஏற்பாட்டின் மேசியா நம்பிக்கைகளை இயேசு நிறைவேற்றினார் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

மூன்றாவது இடத்தில், ஆரம்பகால சபையும் முதல் நூற்றாண்டின் யூத மக்களும் புறஜாதிகளை எவ்வாறு பார்த்தார்கள் என்பதில் வேறுபட்டனர். பெரும்பாலும், யூத மதத்தை பயபக்தியுடன் ஆசரிக்கும் யூதர்கள் புறஜாதிகளுடன் பங்குகொள்ளவில்லை. ஆனால் மறுபுறம், பல விருத்தசேதனம் செய்யப்படாத புறஜாதிகள் யூத மதத்தின் நம்பிக்கைகள் மற்றும் நெறிமுறை போதனைகளால் ஈர்க்கப்பட்டனர், அவர்கள் உள்ளூர் யூத ஜெப ஆலயங்களுடன் தங்களை இணைத்துக் கொண்டனர் மற்றும் தேவனுக்கு பயந்தவர்கள் என்று அறியப்பட்டனர். தேவ பயமுள்ளவர்கள் மற்ற புறஜாதிகளை விட மதிக்கப்பட்டனர், ஆனால் அவர்கள் யூத சமூகத்தின் முழு உறுப்பினர்களாக இல்லை. புறஜாதியினர் யூத மதத்திற்கு மாறினார்கள், ஆனால் இது ஞானஸ்நானம் மற்றும் விருத்தசேதனம் மற்றும் யூத மரபுகளைக் கடைப்பிடிப்பது உள்ளிட்ட துவக்க சடங்குகளை உள்ளடக்கியது.

ஆரம்பகால யூத கிறிஸ்தவர்கள் புறஜாதிகளைப் பற்றிய இதே புரிதலுடன் தொடங்கினாலும், கிறிஸ்துவைப் பின்பற்றும் புறஜாதிகளுக்கு கிறிஸ்தவ சபையில் முழு அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் படிப்படியாக புரிந்துகொண்டனர். பரிசுத்த ஆவியின் புதிய வெளிப்பாட்டின் வெளிச்சத்தில், கிறிஸ்தவ சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் மீதான விசுவாசம் போதுமானது என்று ஆரம்பகால சபை தீர்மானித்தது. எனவே, அப்போஸ்தலர்கள் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இருவருக்கும் கிறிஸ்துவின் உலகளாவிய இறையாட்சியின் சுவிசேஷத்தை அறிவிப்பதை தங்கள் வழக்கமாக்கினர், சபை வளர்ந்தவுடன் இரு மக்களின் வரங்களையும் ஊழியத்தையும் ஏற்றுக்கொண்டனர். பழைய ஏற்பாட்டில் தம் மக்களுக்கு நீட்டித்த ராஜ்யத்தின் நம்பிக்கையை நிறைவேற்ற தேவன் புறஜாதிகளைப் பயன்படுத்துகிறார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இது விசுவாசியாத யூதர்களுக்கும் ஆரம்பகால கிறிஸ்தவர்களுக்கும் இடையே பல மோதல்களுக்கு வழிவகுத்ததில் ஆச்சரியமில்லை.

லூக்கா எழுதிய காலம், அவர் எழுதிய வாசகர்கள் மற்றும் அவர் எழுதிய சமூக சூழல் பற்றிய சில விவரங்களை அறிந்துகொள்வது, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை நன்றாகப் படிக்க நமக்குப் பெரிதும் உதவும். லூக்கா சொன்ன பிரச்சனைகளைப் பாராட்டவும், அவருடைய தீர்வுகளைப் புரிந்துகொள்ளவும், இன்று நம் சொந்த வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்தவும் நாம் சிறப்பாக தயாராக இருப்போம்.

# இறையியல் பின்னணி

இப்போது நாம் அப்போஸ்தலருடைய நடபடிகளின் படைப்பாற்றல் மற்றும் வரலாற்று அமைப்பை ஆராய்ந்துவிட்டோம், இந்த பாடத்தில் நம் மூன்றாவது முக்கிய தலைப்பாக, அப்போஸ்தலருடைய புத்தகத்தின் இறையியல் பின்னணியை ஆராய தயாராக உள்ளோம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தைப் படிக்கும்போது, பல இறையியல் கேள்விகள் மனதில் எழுகின்றன. லூக்கா தனது இறையியல் கண்ணோட்டங்களை எங்கே கற்றுக்கொண்டார்? அவருடைய புத்தகத்தில் எதைப் பேச வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் எப்படி முடிவு செய்தார்? அவர் எழுதுவதை வழிநடத்திய அடிப்படைக் கொள்கைகள் என்ன? சரி, இந்தக் கேள்விகளுக்கான பதில்களை லூக்காவின் இறையியல் பின்னணியில் காணலாம்.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் இறையியல் பின்னணி பற்றிய நமது விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், பழைய ஏற்பாட்டில் லூக்காவின் இறையியலின் அடிப்படைகளை ஆராய்வோம். இரண்டாவதாக, தேவனின் மேசியானிய ராஜ்யத்தைப் பற்றிய அவருடைய நம்பிக்கைகளால் அவருடைய இறையியலில் எவ்வாறு தாக்கம் ஏற்பட்டது என்பதை நாம் பரிசீலிப்போம். மூன்றாவதாக, லூக்காவின் சுவிசேஷம், அப்போஸ்தலருடைய நடபடிகளின் செய்தியை எவ்வாறு புரிந்துகொள்ள உதவுகிறது என்பதைப் பார்ப்போம். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கான பழைய ஏற்பாட்டின் அடித்தளத்துடன் ஆரம்பிக்கலாம்.

## பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடு லூக்காவின் எழுத்தை குறைந்தது இரண்டு வழிகளில் பாதித்தது. முதலில், லூக்கா பொதுவாக வரலாற்றைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் பார்வையால் ஆழமாகப் பாதிக்கப்பட்டார். இரண்டாவது இடத்தில்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குறிப்பாக இஸ்ரவேலின் வரலாற்றைப் பற்றிய அதன் தலையீட்டால் அவர் ஆழமாகப் பாதிக்கப்பட்டார். பொதுவாக வரலாற்றைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் பார்வை லூக்காவின் இறையியலை எவ்வாறு தெரிவித்தது என்பதை முதலில் பார்ப்போம்.

## வரலாறு

17 ஆம் நூற்றாண்டின் கிறிஸ்தவ தத்துவஞானி பிளேஸ் பாஸ்கல் தனது சிறந்த படைப்பான *பென்சீஸில்*, வரலாறு முழுவதும் மனிதர்கள் அங்கீகரித்த மூன்று பெரிய உண்மைகளைப் பற்றி பேசினார். முதலாவதாக, அவர் சிருஷ்டிப்பின் மகிமையையும் அழகையும் குறிப்பிடுகிறார், தேவன் எல்லாவற்றையும் நன்றாக உருவாக்கியதால் பிரபஞ்சத்தில் ஊடுருவி வரும் அதிசயத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். இரண்டாவதாக, சிருஷ்டிப்பின் அசல் மகிமைக்கும் அதன் தற்போதைய துயரத்திற்கும் சீர்கேட்டிற்கும் இடையே உள்ள குழப்பமான மோதலைப் பற்றி அவர் பேசினார். மூன்றாவதாக, பாஸ்கல் மீட்பு பற்றியும் இந்த மோதலுக்கு ஒரு தீர்வு இருக்கும் என்ற நம்பிக்கையைப் பற்றியும் பேசினார்.

பாஸ்கலின் பிரதிபலிப்புகள் பழைய ஏற்பாட்டின் உலக வரலாறு சிருஷ்டிப்பு, பாவத்தில் விழுதல் மற்றும் மீட்பு என்கிற மூன்று முக்கிய நிலைகளாகப் பிரிப்பதற்கு இணையாக உள்ளன. அப்போஸ்தலருடைய நடபடிகளில், வரலாற்றில் இந்த மூன்று மடங்கு கண்ணோட்டம் பிரதிபலிக்கும் வழிகளில் ஆரம்பகால சபையைப் பற்றி லூக்கா எழுதினார்.

சிருஷ்டிப்பின் காலத்தைக் கவனியுங்கள். ஆதியாகமம் 1 இல், தேவன் தனது பரலோக ராஜ்யத்தின் விரிவாக்கமாக உலகத்தை தயார் செய்தார். அவர் பிரபஞ்சத்தை கட்டளையிட்டார்; ஏதேனில் ஒரு பரலோகத்தை உருவாக்கினார்; அந்த பரலோகத்திற்குள் மனிதகுலத்தை, அவரது ராஜா சாயலை வைத்தார்; ஏதேனில் தொடங்கி உலகத்தின் முனைகள் வரை மனிதகுலம் பெருகவும், பூமியை ஆளவும் கட்டளையிட்டார். சுருக்கமாக, தேவன் பூமியில் தனது ராஜ்யத்தின் முழு வளர்ச்சிக்கு மேடை அமைத்தார்.

இந்த முக்கியமான பழைய ஏற்பாட்டு யோசனையைப் பற்றிய லூக்காவின் விழிப்புணர்வு அப்போஸ்தலருடைய நடபடிகளின் பல இடங்களில் தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக, 4:24-30 இல், பேதுருவும் யோவானும் சிருஷ்டிப்பு பூமியின்மீது தேவனுடைய அரச ஆட்சியின் அத்தாட்சியாக இருக்கிறது என்பது பற்றி பேசினார்கள். 14:15-17 இல், பவுலும் பர்னபாவும் தேசங்களின் மீது தேவனுடைய ஆட்சிக்கு அடிப்படையாக சிருஷ்டிப்பு இருக்கிறதைப் பற்றி பேசினார்கள். 7:49 இல், தேவன் தனது ராஜ பாதபடியாக இருக்க உலகைப் படைத்தார் என்று ஸ்தேவான் வலியுறுத்தினார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:24-27 இல் அத்தேனே பட்டணத்தில் பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் … மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி… கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (அப் 17:24-27).

இந்த வேத பகுதியின் படி, பவுலின் சுவிசேஷ ஊழியத்தின் பின்னணி சிருஷ்டிப்பு வரை சென்றது. உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கர்த்தரே தேவன். மனிதர்கள் அவரைத் தேடவும், அவரை அணுகவும், அவரைக் கண்டுபிடிக்கவும் அவர் உலகிற்கு கட்டளையிட்டார். பவுலின் சுவிசேஷ ஊழியம், சிருஷ்டிப்பில் தேவன் ஏற்படுத்திய நோக்கங்களில் இருந்து வளர்ந்தது. இந்த விவரங்களை தனது புத்தகத்தில் சேர்ப்பதன் மூலம், ஆரம்பகால சபை பற்றிய தனது சொந்த புரிதலுக்கு சிருஷ்டிப்பின் கருப்பொருள் முக்கியமானது என்று லூக்கா சுட்டிக்காட்டினார்.

ஏறக்குறைய அதே வழியில், மனிதகுலம் பாவத்தில் விழுவதைப் பற்றிய லூக்காவின் விழிப்புணர்வும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் முன்னணியில் வருகிறது. நமக்குத் தெரிந்தபடி, தேவன் மனிதகுலத்தைப் படைத்த பிறகு, ஆதாமும் ஏவாளும் அவருக்கு எதிராகக் கலகம் செய்தார்கள் என்று ஆதியாகமம் 3 கற்பிக்கிறது. மேலும் இதன் தாக்கம் மிகப்பெரியதாக இருந்தது. பழைய ஏற்பாட்டின் படி, மனிதகுலம் உலகில் அத்தகைய முக்கிய பங்கைக் கொண்டிருந்தது, அவர்கள் பாவத்தில் விழுந்தது முழு மனித இனத்தையும் மரணத்தின் சாபத்தின் கீழ் கொண்டு வந்து முழு சிருஷ்ப்பையும் சிதைத்தது.

லூக்கா பாவத்தின் துயரத்தைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதும் பல இடங்களில் எழுதினார். 2:38 மற்றும் 3:19 இல் பேதுருவின் பிரசங்கங்களிலும், 5:29-32 இல் நியாய சங்கத்தின் முன் அப்போஸ்தலர்களின் வாதத்திலும், 20:18-35 இல் எபேசிய மூப்பர்களுக்கு பவுல் சொன்ன வார்த்தைகளிலும் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 26:20-ல் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பவுல் பேசிய பேச்சிலும் வீழ்ச்சி பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம்.

மனிதகுலம் பாவத்தில் விழுவதால் சிருஷ்டிப்பில் உள்ள அனைத்தும், அதாவது இயற்பியல் உலகம், நமது பொருளாதார கட்டமைப்புகள், நமது அரசியல் அமைப்புகள் மற்றும் சபை கூட துன்பப்படுகின்றன என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மீண்டும் மீண்டும் விளக்குகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்காவின் வரலாறு, சிருஷ்ப்பு மற்றும் வீழ்ச்சி பற்றிய பழைய ஏற்பாட்டு போதனைகளை அவர் விசுவாசித்தது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மட்டுமல்லாமல், மீட்பைப் பற்றி பழைய ஏற்பாடு கூறியதையும் ஏற்றுக்கொண்டார் என்பதைக் குறிக்கிறது. பாவம் மனிதகுலத்தையும் சிருஷ்டிகளையும் எவ்வளவு பயங்கரமாக சிதைத்தாலும், தேவன் இந்த உலகை நம்பிக்கையற்றதாக விடவில்லை என்பதை லூக்கா அறிந்திருந்தார்.

பாவத்தின் சாபத்திலிருந்து தேவன் உலகத்தில் நுழைந்ததிலிருந்து மக்களை மீட்டு காப்பாற்றுகிறார் என்று பழைய ஏற்பாடு கற்பித்தது. ஆனால் இதை விட, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பாவமும் அதன் சாபமும் சிருஷ்டிப்பிலிருந்து முற்றிலும் அகற்றப்படும் ஒரு நாளையும் கணித்துள்ளனர். லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதியிருந்தாலும், கிறிஸ்துவின் இரட்சிப்பின் செயல் மூலம் இந்த மீட்பு உலகிற்கு வருகிறது என்று அவர் அடிக்கடி தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இந்த கருப்பொருள் அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதும் தோன்றுகிறது.

இந்த மீட்பின் கருப்பொருள்களை 2:21-40 இல் பேதுருவின் பிரசங்கம்; 5:29-32 இல் நியாய சங்கத்தின் முன் அப்போஸ்தலர்கள் தங்களை நியாயப்படுத்துதல்; 11:14 இல் கொர்நெலியுவுக்கு தேவதூதன் சொன்ன வார்த்தைகள்; 13:23 இல் பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோக்கியாவின் ஜெப ஆலயத்தில் பவுலின் பேச்சு; 15:7-11 இல் எருசலேம் ஆலோசனை சங்கத்தில் பேதுருவின் வாதம், மற்றும் 16:30-31 இல் பிலிப்பிய சிறைக்காவலரிடம் பவுல் மற்றும் சீலாவின் வார்த்தைகள் ஆகியவற்றில் நாம் காண்கிறோம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை நாம் அணுகும்போது, லூக்கா உலக வரலாற்றைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் பார்வையால் ஆழமாகப் பாதிக்கப்பட்டார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதனால்தான், சிருஷ்டிப்பிலிருந்து, பாவத்தில் விழுவது மற்றும் கிறிஸ்துவில் இருக்கிற மீட்பு வரை உலக வரலாற்றின் பரந்த நோக்கத்தை பிரதிபலிக்கும் முதல் நூற்றாண்டு தருணங்களை அடிக்கடி பதிவு செய்தார்.

இப்போது நாம் பொதுவாக பழைய ஏற்பாட்டின் வரலாற்றைப் பார்த்தோம், குறிப்பாக இஸ்ரவேலின் வரலாற்றைப் பற்றிய அதன் பார்வைக்கு நாம் திரும்பத் தயாராக இருக்கிறோம், மேலும் அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்காவின் பதிவு இந்த விசேஷித்த தேசத்தின் வரலாற்றைச் சார்ந்தது.

## இஸ்ரவேல்

லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதும்போது இஸ்ரவேலின் வரலாற்றை பல வழிகளில் சார்ந்து எழுதினார். எடுத்துக்காட்டாக, இஸ்ரவேலின் வரலாற்றில் இருந்து மூன்று நிகழ்வுகளை மட்டும் நாம் விவாதிப்போம், அவையாவன: ஆபிரகாமை தேவன் தேர்வு செய்தல், மோசேயின் கீழ் இஸ்ரவேலர்கள் நாடு திரும்புதல் மற்றும் தாவீதின் வம்சத்தை நிறுவுதல். முதலில், தேவன் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தது லூக்காவின் வரலாற்றுக்கு எவ்வாறு உதவியது என்பதைக் கவனியுங்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமம் 12:1-3, ஆபிரகாமை ஒரு விசேஷித்த தேசத்தின் பிதாவாக தேவன் தேர்ந்தெடுத்ததை பதிவு செய்கிறது. அங்கே இந்த வார்த்தைகளை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> கர்த்தர் ஆபிராமை நோக்கி இவ்வாறு கூறினார், "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து; உன் பேரைப் பெருமைப் படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 12:1-3).

இந்த வசனங்களின்படி, இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்லும்படி தேவன் ஆபிரகாமை அழைத்தார்.

ஒருபுறம், ஆபிரகாம் ஒரு பெரிய தேசத்திற்கு பிதாவாக இருப்பார், பிரபலமடைவார், மேலும் பல ஆவிக்குரிய மற்றும் உலக ஆசீர்வாதங்களைப் பெறுவார். ஆபிரகாமுக்கும் அவருக்குப் பின் வந்த அவருடைய சந்ததியினருக்கும் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள், இந்த விழுந்துபோன உலகத்தில் கூட, தேவனின் இரட்சிப்பில் நம்பிக்கை இருக்கிறது என்பதற்கான அடையாளமாக இருக்கின்றன.

ஆனால் மறுபுறம், தேவனின் அழைப்பு ஆபிரகாமும் அவருடைய சந்ததியினரும் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களுக்கு அப்பால் சென்றது. ஆபிரகாம் மூலம், பூமியிலுள்ள அனைத்து மக்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமும் அவருடைய சந்ததியும் பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களின் ஒரு வழியாக மாறுவார்கள்.

ஆபிரகாமை தேவன் தேர்ந்தெடுத்ததன் இந்த இரு மடங்கு கவனம், அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்காவின் சிந்தனையின் பெரும்பகுதிக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஒருபுறம், தேவன் முற்பிதாவான ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றி ஆபிரகாமின் சந்ததியினரான யூதர்களுக்கு கிறிஸ்துவில் இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை எவ்வாறு தந்தார் என்பதை லூக்கா அடிக்கடி அறிக்கை செய்தார்.

ஆனால் மறுபுறம், யூத கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை புறஜாதிகளுக்கு எவ்வாறு கொண்டு வந்தனர் என்பதையும் லூக்கா கவனித்தார். பிலிப்பு, பேதுரு, பவுல் மற்றும் பர்னபா போன்ற யூதர்கள் இரட்சிப்பின் நற்செய்தியை புறஜாதி உலகிற்கு எடுத்துச் சென்றதாக அப்போஸ்தலருடைய நடபடிகளில் மீண்டும் மீண்டும் லூக்கா அறிவித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதுவும் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியது.

இரண்டாவது இடத்தில், அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்காவின் கண்ணோட்டம் மோசேக்கும் கிறிஸ்தவ சபைக்கும் இடையிலான உறவைப் பற்றிய அவரது புரிதலையும் காட்டியது. தேவனின் மீட்பராக, மோசே இஸ்ரவேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வழிநடத்தினார், தேவனுடைய பிரமாணத்தை தேசத்திற்கு வழங்கினார், மேலும் அவர்களை நியாயப்பிரமாணத்திற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றார். அதே பிரமாணத்தில், தேவன் ஒரு நாள் தன்னைப் போன்ற மற்றொரு தீர்க்கதரிசியை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தம் மக்களை மீட்க அனுப்புவார் என்று மோசே தீர்க்கதரிசனம் கூறினார். அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்கா சுட்டிக்காட்டியபடி, மோசேயைப் போன்ற இந்த தீர்க்கதரிசி இயேசுவாக மாறினார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:37-39 இல் லூக்கா பதிவு செய்த ஸ்தேவானின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப்பண்ணுவார்." சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே. இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களிலே எகிப்துக்குத் திரும்பினார்கள் (அப் 7:37-39).

ஸ்தேவானின் பார்வையில், மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசி இயேசுவே. எனவே, இயேசுவை நிராகரிப்பது என்பது பண்டைய இஸ்ரவேலர்கள் செய்தது போலவே மோசேயையும் நியாயப்பிரமாணத்தையும் நிராகரிப்பதாகும். மோசேக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் உண்மையாக அர்ப்பணிப்புடன் இருக்க, ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 28:23 இல் யூதத் தலைவர்களுக்கு பவுலின் வார்த்தைகளை லூக்கா எவ்வாறு சுருக்கமாகக் கூறினார் என்பதை கவனியுங்கள்:

> அவன் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசினான் (அப் 28:23).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பவுலுக்கும் மற்ற ஆரம்பகால சபைக்கும், மோசே மற்றும் நியாயப்பிரமாணத்தை ஏற்றுக்கொள்வது கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதற்கு அடித்தளமாக இருந்தது. இந்த நம்பிக்கை லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகளில் எழுதியதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மூன்றாவது இடத்தில், தாவீதின் வம்சத்தின் பழைய ஏற்பாட்டு பதிவேடும் லூக்காவின் மீது தாக்கம் ஏற்படுத்தியது. இஸ்ரவேலை ஆளும் நிரந்தர வம்சமாக தாவீதின் வீட்டை ஸ்தாபிப்பதை விட லூக்காவிற்கு முக்கியமான எந்த பழைய ஏற்பாட்டின் கருப்பொருளையும் கற்பனை செய்வது கடினம்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஒரு பேரரசாக வளர்ந்தபோது, தேவன் தனது மக்களை வழிநடத்த நிரந்தர வம்சமாக தாவீதின் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் தாவீதின் குடும்பம் தேவனின் ஆட்சியை இஸ்ரவேலிலிருந்து பூமியின் கடைசி வரை நீட்டிக்கும் நாளையும் பழைய ஏற்பாடு எதிர்பார்த்தது.

சங்கீதம் 72:8, 17 இல் நாம் வாசிக்கிறது போல:

> ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்.... மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள் (சங்கீதம் 72:8, 17).

இந்த வசனங்கள் வெளிப்படுத்துவது போல், ஆபிரகாம் உலகிற்கு ஒரு ஆசீர்வாதமாக மாறுவது அவருடைய வம்சாவழியான தாவீதின் மூலமாக இருந்தது. ஆனால் தாவீது இதை தானே சாதிக்க மாட்டார். மாறாக, அவரது சந்ததியினரில் ஒருவர், உலகம் முழுவதும் தனது கருணையுள்ள, அமைதியான ஆட்சியை நீட்டிக்க ராஜாவாக இருப்பார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், தாவீதின் வீட்டில் இருந்த இந்த நம்பிக்கையை லூக்கா ஆழமாகப் பெற்றார். சபையின் மூலம் எருசலேமிலிருந்து பூமியின் கடைசி வரை தனது ஆட்சியை விரிவுபடுத்திய தேவனுடைய ராஜ்யத்தின் ராஜ அதிபதியான தாவீதின் குமாரன் இயேசு என்பதை அவர் புரிந்துகொண்டார்.

உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 15:14-18 இல் காணப்படும் எருசலேம் சங்கத்தில் யாக்கோபின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> தேவன் முதலில் புறஜாதியாரிடமிருந்து தனக்கென ஒரு ஜனத்தை எடுத்துக்கொள்வதன் மூலம் தம் அக்கறையைக் காட்டினார். எழுதப்பட்டிருக்கிறது போல, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் இதற்கு உடன்படுகின்றன: "நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே

> பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன். ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது" என்று சொல்கிறார் (அப் 15:14-18).

இங்கே யாக்கோபு ஆமோஸ் 9: 11-12 ஐக் குறிப்பிட்டார், அங்கு தேவன் தாவீதின் வம்சத்தை மீட்டெடுப்பார் மற்றும் புறஜாதி தேசங்களின் மீது தனது ஆட்சியை நீட்டிப்பார் என்று ஆமோஸ் கணித்தார். அவர் இங்கு குறிப்பிட்டது போல், புறஜாதிகள் மத்தியில் சுவிசேஷத்தின் வெற்றியானது இந்த பழைய ஏற்பாட்டு நம்பிக்கைகளின் நிறைவேற்றம் என்று யாக்கோபு நம்பினார்.

ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்கு இயேசு வாரிசு என்றும், மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி என்றும், இறுதியான தாவீதின் வழியில் வரும் ராஜா என்றும் லூக்கா தனது வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். இயேசு தம் சிங்காசனத்தில் ஏறி, சுவிசேஷ அறிவிப்பு மற்றும் சபை வளர்ச்சியின் மூலம் உலகை வென்று, பழைய ஏற்பாடு முன்னறிவித்ததைப் போலவே, எருசலேமிலிருந்து பூமியின் கடைசி வரை தனது இரட்சிப்பின் ராஜ்யத்தை விரிவுபடுத்தினார்.

## தேவனுடைய ராஜ்யம்

பழைய ஏற்பாட்டை லூக்கா சார்ந்திருப்பதைப் பார்த்த பிறகு, அப்போஸ்தலருடைய நடபடிகளின் இறையியல் பின்னணியில் தேவனின் மேசியா ராஜ்யம் எவ்வாறு பங்களித்தது என்பதைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

இயேசுவையும் ராஜ்யத்தையும் பற்றிய நமது விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலாவதாக, முதல் நூற்றாண்டில் பரவலாக இருந்த யூத மேசியானிய இறையியலைப் பற்றி சிந்திப்போம். இரண்டாவதாக, யோவான் ஸ்நானகனின் இறையியலில் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, இந்தக் கருத்துக்களை லூக்கா அங்கீகரித்த கிறிஸ்தவ மேசியானிய இறையியலுடன் சுருக்கமாக ஒப்பிடுவோம். யூத இறையியலின் முன்னோக்குகளுடன் ஆரம்பிக்கலாம்.

### யூத இறையியல்

கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகங்கள் எழுதப்பட்ட பிறகு, இஸ்ரவேல் ஆவிக்குரிய இருளில் நுழைந்தது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, பெரும்பான்மையான இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வெளியே வாழ்ந்தனர், மேலும் தேசத்தில் தங்கியிருந்தவர்கள் புறஜாதி ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மையின் கீழ் துன்பப்பட்டனர். முதலில் அது பாபிலோனியர்கள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பின்னர் மேதியர்கள் மற்றும் பெர்சியர்கள், பின்னர் கிரேக்கர்கள், இறுதியாக ரோமர்கள். இந்த நீண்டகால துன்ப வரலாற்றின் விளைவாக, தேவன் ஒரு மேசியானிய விடுதலையாளரை இஸ்ரவேலுக்கு அனுப்புவார் என்ற நம்பிக்கை யூத இறையியலின் மிகவும் மேலாதிக்க அம்சங்களில் ஒன்றாக மாறியது.

யூத மேசியா நம்பிக்கைகள் பல்வேறு வடிவங்களை எடுத்தன. உதாரணமாக, ரோம அதிகாரிகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதன் மூலம் இஸ்ரவேல் மேசியாவின் நாளைக் கொண்டுவர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று செலோத்தேயர்கள் நம்பினர். தேவன் தனது எதிரிகளை அழித்து மக்களை மீட்டெடுக்க இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தலையிடுவார் என்று வெவ்வேறு கடைசி கால நம்பிக்கை குழுக்கள் நம்பின. இஸ்ரவேல் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் வரை தேவன் தலையிட மாட்டார் என்று நம்பிய பரிசேயர்களைப் போன்ற சடங்காச்சார கொள்கையாளர்களும் இருந்தனர். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் பல்வேறு இடங்களில், பல யூதர்கள் மேசியானிய ராஜ்யத்தைப் பற்றிய கிறிஸ்தவ பார்வையை நிராகரித்ததாக லூக்கா குறிப்பிட்டார்.

யூதர்கள் மேசியா மீது பலவிதமான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தாலும், யோவான் ஸ்நானகனின் ஊழியத்தின் மூலம் யூத இறையியலில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்ததை லூக்கா கண்டார்.

## யோவான் ஸ்நானகன்

லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டும் யோவான் ஸ்நானகன் உண்மையான மனந்திரும்புதலுக்கு அழைப்பு விடுத்ததைக் குறிப்பிடுகின்றன, மேலும் மேசியா தேவனின் ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவரப் போகிறார் என்ற நற்செய்தியை அறிவித்தன. யோவான் இயேசுவை மேசியா என்று சரியாக அடையாளம் காட்டினார். லூக்கா 3:16-17 இல் உள்ள யோவான் �ஸ்நானகனின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும், நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" என்றான் (லூக்கா 3:16-17).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயத்தீர்ப்பு உட்பட, பரிசுத்த ஆவியின் பெரும் ஆசீர்வாதத்தையும் சுத்திகரிப்பையும் மேசியா கொண்டுவருவார் என்று யோவான் இங்கே சரியாக அறிவித்தார். ஆனால் மேசியா இந்த வேலையை ஒரேயடியாக செய்துவிடுவார் என்ற தவறான எண்ணத்தில் இருந்தார்.

மேசியா உலகிற்கு இரட்சிப்பையும் நியாயத்தீர்ப்பையும் வெவ்வேறு நிலைகளில் கொண்டு வருவார் என்று யோவான் எதிர்பார்க்கவில்லை. பின்னர், யூத இறையியலாளர்கள் மேசியா செய்வார் என்று எதிர்பார்த்த அனைத்தையும் இயேசு இன்னும் செய்யவில்லை என்ற உண்மையால் யோவான் குழப்பமடைந்தார். யோவான் மிகவும் குழப்பமடைந்து, அவர் உண்மையிலேயே மேசியாவா என்று இயேசுவிடம் கேட்க தூதுவர்களை அனுப்பினார்.

லூக்கா அவர்களின் கேள்வியையும் இயேசுவின் பதிலையும் லூக்கா 7:20-23 இல் விவரித்த விதத்தைக் கவனியுங்கள்:

> அந்தப்படி அவர்கள் அவரிடத்தில் வந்து: 'வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா?' என்று கேட்கும்படி "யோவான்ஸ்நானகன் எங்களை உம்மிடத்திற்கு அனுப்பினார்" என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்றார் (லூக்கா 7:20-23).

யோவான் ஸ்நானகனுக்கு அளித்த பதிலில், ஏசாயா புத்தகத்தில் உள்ள பல மேசியானிய தீர்க்கதரிசனங்களை இயேசு குறிப்பிட்டார். பழைய ஏற்பாட்டு மேசியானிய தீர்க்கதரிசனத்தின் பல்வேறு எதிர்பார்ப்புகளை யோவான் பூர்த்தி செய்யவில்லை என்றாலும், அவற்றை நிறைவேற்றும் பணியில் யோவானுக்கு உறுதியளிக்க அவர் இதைச் செய்தார். மேசியானிய செயல் வெளிப்படும் விதத்தின் காரணமாக விழுந்துபோக வேண்டாம் என்றும் இயேசு யோவானை ஊக்கப்படுத்தினார்.

சுருக்கமாகச் சொன்னால், இயேசுவின் மேசியானியப் பணி எதிர்பார்த்ததைவிட மிகவும் வித்தியாசமாக இருந்தது. யூத மேசியானிய நம்பிக்கைகளைக் கொண்டிருந்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தாவீது ஆட்சி செய்த ராஜ்யத்தைப் போலவே மேசியாவின் ஆட்சியின் கீழ் உடனடி பூமிக்குரிய அரசியல் ராஜ்யத்தை எதிர்பார்த்தனர். ஆனால் இயேசு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது இந்த வகையான ராஜ்யத்தை நிறுவ முயற்சிக்கவில்லை.

யூத மேசியானிய இறையியல் மற்றும் யோவான் ஸ்நானகன் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, மேசியா மற்றும் தேவனுடைய ராஜ்யத்தின் ஆரம்பகால கிறிஸ்தவ இறையியலுக்கு திரும்ப தயாராக இருக்கிறோம்.

## கிறிஸ்தவ இறையியல்

லூக்காவின் எழுத்துக்களில், புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே, கிறிஸ்தவ மேசியானிய இறையியல் கிறிஸ்தவ சுவிசேஷத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்தை நாம் இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

> மேசியாவாகிய இயேசு மற்றும் அவரின் செயல் மூலம் தேவனின் ராஜ்யம் பூமிக்கு வருகிறது, மேலும் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பவர்களுக்கு தேவன் இரட்சிப்பை வழங்குவதால் அது அதன் பெரிய முழுமையை நோக்கி விரிவடைகிறது என்ற அறிவிப்பே சுவிசேஷமாகும்.

சுவிசேஷ செய்தி இரண்டு அத்தியாவசிய யோசனைகளைத் தொடுவதை நீங்கள் கவனிப்பீர்கள். ஒருபுறம், கிறிஸ்தவ சுவிசேஷத்தின் மிகவும் புறநிலையான பக்கத்தை நாம் அழைப்பதைக் காண்கிறோம். இயேசு மற்றும் அவரின் செயல் மூலம் தேவனின் ராஜ்யம் பூமிக்கு வருகிறது. மேசியாவாக, இயேசு பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் இறுதிக் கட்டத்தைத் தொடங்கினார் என்றும், அவர் தொடங்கியதை முடிக்க ஒரு நாள் திரும்புவார் என்றும் லூக்கா நம்பினார்.

மறுபுறம், புதிய ஏற்பாட்டு சுவிசேஷ செய்தி அகநிலை பகுதியையும் கொண்டிருந்தது. இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு நம்புபவர்களுக்கு தேவன் இரட்சிப்பை வழங்குவதால், தேவனின் ராஜ்யத்தின் இறுதிக் கட்டம் அதன் பெரிய முழுநிறைவை நோக்கி விரிவடைகிறது என்று அது அறிவித்தது. சுவிசேஷ விசுவாசிகளின் இருதயங்களைத் தொட்டு, அவர்களை இயேசு நிறைவேற்றிய இரட்சிப்பிற்குள் கொண்டு வரும்போது, உலகத்தின் மீது தேவனின் ஆட்சி முன்னேறுகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், சுவிசேஷத்தின் இந்த இரண்டு பரிமாணங்கள் மீதும் லூக்கா கவனத்தை ஈர்த்தார். புறநிலை பக்கத்தில், கிறிஸ்துவில் தேவனின் மாபெரும் இரட்சிப்பின் உண்மைகளை அவர் வலியுறுத்தினார். இயேசு தம்முடைய மக்களின் பாவங்களுக்காக மரித்தார் என்றும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும், பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் அவர் ஆட்சிசெய்கிறார் என்றும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர் மகிமையுடன் திரும்புவார் என்றும் சபையின் அறிவிப்பை அவர் பதிவு செய்தார்.

உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:22-24 இல் பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தைப் பற்றிய லூக்காவின் பதிவைக் கவனியுங்கள்:

> நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.... அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார் (அப் 2:22-24).

பேதுருவின் சுவிசேஷ அறிவிப்பில் மேசியாவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய புறநிலை உண்மைகள் உள்ளன என்பதைக் கவனியுங்கள்.

ஆனால் லூக்கா சுவிசேஷத்தின் அகநிலை பக்கத்தின் மீதும் கவனத்தை ஈர்த்தார். பல சந்தர்ப்பங்களில், மக்கள் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவின் சத்தியத்தைத் தழுவுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார், அதனால் அது அவர்களின் வாழ்க்கையை மாற்றியது.

உதாரணமாக, பேதுருவின் பெந்தெகொஸ்தே பேச்சு பற்றிய லூக்காவின் பதிவு, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:37-38 இல் உள்ள இந்த வார்த்தைகளையும் உள்ளடக்கியது.

> இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான் (அப் 2:37-38).

கிறிஸ்தவ சுவிசேஷம் அதைக் கேட்பவர்களின் இருதயத்தை வெட்டுகிறது. இது வெறும் உண்மைகளை ஒப்புக்கொள்வது மட்டுமல்ல, இரட்சகரின் இருதயப்பூர்வமான, வாழ்க்கையை மாற்றும் அரவணைப்பாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் கூறியது போல், முதல் நூற்றாண்டு யூத இறையியல் மேசியா ஒரு அரசியல் ராஜ்யத்தை ஒரே நேரத்தில் நிறுவுவார் என்று நம்பியது. ஆனால் சபையின் விரிவாக்கம் மற்றும் மக்களின் தனிப்பட்ட மாற்றத்தின் மூலம் மேசியாவின் ராஜ்யம் படிப்படியாக வளர்கிறது என்று இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் கற்பித்தார்கள்.

சுவிசேஷ அறிவிப்பின் மூலம் அவிசுவாசிகளின் மனமாற்றத்தில் லூக்கா அதிக கவனம் செலுத்தியதற்கு இதுவும் ஒரு காரணம். தேவனுடைய மேசியானிய ராஜ்யம் உலகம் முழுவதும் விரிவடைவதற்கான வழி இதுதான் என்பதை அவர் அறிந்திருந்தார்.

பழைய ஏற்பாட்டு பார்வையின் பரந்த வரையறைகளை மனதில் கொண்டு, அப்போஸ்தலருடைய நடபடிகளின் இறையியல் பின்னணியின் மூன்றாவது அம்சமான லூக்கா சுவிசேஷத்தில் அதன் அடித்தளம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## லூக்கா எழுதின சுவிசேஷம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தைப் படிக்கும்போது, தெயோப்பிலுவுக்கு லூக்கா எழுதிய இரண்டு தொகுதிகளில் இது இரண்டாவது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். லூக்கா எப்போதும் இந்தப் புத்தகங்கள் ஒன்றாகப் படிக்கப் பட வேண்டும் என்று எண்ணினார். அவரது சுவிசேஷம் கதையின் முதல் பகுதியாகும். அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் கதையின் இரண்டாம் பகுதியாகும். எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை சரியாக வாசிப்பதற்கு, சுவிசேஷத்தில் தொடங்கப்பட்ட கதை எவ்வாறு தொடர்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் செய்தியைப் புரிந்துகொள்ள லூக்கா சுவிசேஷம் நம்மைத் தயார்படுத்தும் பல வழிகள் உள்ளன. ஆனால் நம் நோக்கங்களுக்காக இரண்டு தொகுதிகளிலும் பரவியிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் கருப்பொருளில் கவனம் செலுத்துவோம். லூக்காவில், இயேசு தேவனின்  ராஜ்ஜியத்திற்கான மாதிரியையும் இலக்கையும் நிறுவினார், மேலும் அவருடைய பரமேறுதலுக்குப் பிறகு அவருடைய வேலையைத் தொடர அவருடைய அப்போஸ்தலர்களைத் தயார் செய்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், இயேசு பரலோகத்திற்கு ஏறி, சுவிசேஷத்தின் மூலம் பரிசுத்த ஆவியின் உதவியால் தம்முடைய ராஜ்யத்தை விரிவுபடுத்தும் பொறுப்பில் அவருடைய அப்போஸ்தலர்களை விட்டுச் சென்றார்.

அப்போஸ்தலர்களின் ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும் வேலைக்கான வழியை லூக்கா சுவிசேஷம் ஆயத்தம் செய்யும் இரண்டு வழிகளை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பார்ப்போம். முதலாவதாக, ராஜ்யத்தைக் கொண்டுவந்த இயேசுவைப் பற்றி நாம் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, இயேசு பரலோகத்திற்கு போன பிறகு ராஜ்யத்தை தொடர செய்வதில் அப்போஸ்தலர்களின் பங்கு எப்படி என்று ஆராய்வோம். தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவருபவர் இயேசு என்பதில் ஆரம்பிக்கலாம்.

## இயேசு

லூக்கா தனது சுவிசேஷம் முழுவதும், இயேசுவை தேவனுடைய ராஜ்யத்தின் வருகையை அறிவித்த தீர்க்கதரிசி என்றும், அதன் சிங்காசனத்தில் ஏறி ராஜ்யத்தை அதன் அதிகாரத்திற்குக் கொண்டுவரும் ராஜா என்றும் வகைப்படுத்தினார். இந்த இரண்டு கருத்துக்களையும் இயேசுவே பல இடங்களில் பேசினார். ஆனால் உதாரணத்தின் மூலம், அவர் தனது பொது ஊழியத்தில் குறிப்பிட்டதை இரண்டு முறை மட்டுமே கருத்தில் கொள்வோம்.

ஒருபுறம், லூக்கா 4:43 இல், இயேசு தனது பொது ஊழியத்தின் தொடக்கத்தில் இந்த வார்த்தைகளை பேசினார்:

> நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவேண்டும் … இதற்காகவே அனுப்பப்பட்டேன் (லூக்கா 4:43).

மறுபுறம், அவருடைய பொது ஊழியத்தின் முடிவில், அவர் ராஜாவாக அறிவிக்கப்பட்ட எருசலேமுக்குள் அவர் வெற்றிகரமாக நுழைவதற்கு சற்று முன்பு, இயேசு லூக்கா 19:12-27 இல் பத்து ராத்தல் திரவியங்களின் உவமையைக் கூறினார். இந்த உவமையில், ராஜ்யம் எப்படி மெதுவாக வரும் என்பதை விளக்கினார். அவருடைய காலத்தில் இருந்த பெரும்பாலான யூதர்கள் ஒரு ராஜ்யம்  அதன் முழுமையுடன் உடனடியாக வரும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் இயேசு ராஜ்யத்தை மெதுவாகவும் படிப்படியாகவும் கொண்டு வருவதாகக் கற்பித்தார். இயேசு ராஜ்யத்தைத் தொடங்கினார், ஆனால் அவர் ராஜாவாக முடிசூட்டப்படுவதற்கு நீண்ட காலம் ஆகும், அவர் திரும்பும் வரை அவர் தனது ராஜ்யத்தை முடிக்க மாட்டார்.

லூக்கா 19:11-12 இல் பத்து ராத்தல் திரவியங்ககளின் உவமை தொடங்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> இயேசு அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார், ஏனென்றால் அவர் எருசலேமுக்கு அருகில் இருந்தார், மேலும் தேவனுடைய ராஜ்யம் உடனடியாக தோன்றப்போகிறது என்று மக்கள் நினைத்தார்கள். அவர் இவ்வார் கூறினார்: "பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்." (லூக்கா 19:11-12).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இங்கே என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள். இயேசு எருசலேமுக்குள் நுழைந்து ராஜாவாக அறிவிக்கப்படவிருந்தார், ஆனால் இந்த நேரத்தில் அவர் தன்னை ஒரு பூமிக்குரிய ஆட்சியாளராக நிறுவுவார் என்று மக்கள் கருதுவதை அவர் விரும்பவில்லை. அதற்கு பதிலாக, அவர் தனது அரச பதவியைப் பெறுவதற்காக நீண்ட காலம் இங்கே இருக்க மாட்டார், எதிர்காலத்தில் தனது பூமிக்குரிய ராஜ்யத்தை ஆட்சி செய்யத் திரும்புவார்.

மேலும் இதுதான் நடந்தது. எருசலேமில், இயேசு கைது செய்யப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். பின்னர் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு சென்றார், அந்த நேரத்தில் அவர் பிதாவிடமிருந்து தனது அரசாட்சியைப் பெற்றார். மேலும் அவர் தனது ராஜ்யத்தை நிறைவடையச் செய்ய இன்னும் திரும்பவில்லை.

லூக்காவின் சுவிசேஷம் இயேசுவை ராஜ்ஜியத்தைக் கொண்டுவரும் ஒருவராக நிறுவிய விதத்தைப் பற்றிய இந்த புரிதலுடன், இந்த புத்தகத்தில் நிறுவப்பட்ட இரண்டாவது விஷயமான சுவிசேஷத்தின் மூலம் ராஜ்யத்தை மேம்படுத்துவதில் அப்போஸ்தலர்களின் பங்கு என்பதற்கு நாம் திரும்ப வேண்டும்.

## அப்போஸ்தலர்கள்

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய இரவில், அவர் ராஜ்யத்தைக் கொண்டுவரும் வேலையைத் தொடருமாறு தனது அப்போஸ்தலர்களுக்கு அறிவுறுத்தினார்.

லூக்கா 22:29-30 இல் அவர் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் (லூக்கா 22:29-30).

இயேசு தம்முடைய ராஜ்யத்தில் தலைவர்களாகவும் நியாதிபதிகளாகவும் தம்முடைய அப்போஸ்தலர்களை நியமித்தார். அவர்களின் வேலை, பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து, அவர் விட்டுச்சென்ற இடத்திலேயே தொடர்வதும், ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்துவதும், உலகத்தை நிரப்ப ராஜ்யத்தை விரிவுபடுத்துவதும் ஆகும்.

எனவே, லூக்காவின் சுவிசேஷம் ராஜ்யத்தைத் தொடங்குவது இயேசுவின் முதன்மையான பணி என்று நிறுவுவதையும், அவர் பரலோகத்திற்கு ஏறிய பிறகு இந்த வேலையைச் செய்ய அப்போஸ்தலர்களை நியமித்ததையும் நாம் காணலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லூக்கா சுவிசேஷம் முடிவடையும் இடத்திலேயே அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் தொடங்குகிறது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகும், பரலோகத்திற்கு ஏறுவதற்கு முன்பும், அப்போஸ்தலர்களுக்குப் போதிப்பதில் நேரத்தைச் செலவிட்டார் என்று லூக்கா விளக்குகிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:3-8 இல் உள்ள லூக்காவின் பதிவைக் கவனியுங்கள்:

> நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசினார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது: "நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் … நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்." … அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" என்று கேட்டார்கள். அவர் இவ்வாறு அவர்களுக்கு சொன்னார்: "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:3-8).

மீண்டும் ஒருமுறை, ராஜ்யத்தின் உடனடியான நிறைவை எதிர் பார்க்க வேண்டாம் என்று இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை ஊக்குவித்தார். மாறாக, உலகம் முழுவதும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் அவருடைய பணியைத் தொடர வேண்டியது அப்போஸ்தலர்களின் பொறுப்பு என்பதை உறுதிப்படுத்தினார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இதைத்தான் அப்போஸ்தலர்கள் செய்தார்கள். அவர்கள் சபையை தேவனுடைய ராஜ்யத்தின் தற்போதைய வடிவமாக கட்டியெழுப்பினார்கள். அவர்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை புதிய நாடுகளுக்கும் மக்களுக்கும் கொண்டு வந்தனர், எருசலேம், யூதேயா, சமாரியா, பூமியின் கடைசி வரை ராஜ்யத்தை விரிவுபடுத்தினர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள்  புத்தகத்தை லூக்கா 28:30-31 இல் முடித்த விதத்தைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான் (அப் 28:30-31).

பவுல் "சுவிசேஷத்தை" பிரசங்கித்தார் என்று வெறுமனே கூறாமல், பவுல் தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்ததாக லூக்கா கூறினார். அப்போஸ்தலர்கள் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை தங்கள் பிரகடனத்தின் மூலம் விரிவுபடுத்தியவர்கள் என்ற அவர்களது பங்கை வலியுறுத்தி, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் தொடங்கும்போதே முடிவடைகிறது.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை அணுகும்போது, லூக்கா பழைய ஏற்பாட்டு பின்னணியிலும் கிறிஸ்துவில் உள்ள தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய முதல் நூற்றாண்டு நம்பிக்கைகளின் பின்னணியிலும் எழுதினார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் ஊழியத்தின் மூலம் தொடங்கிய ராஜ்யத்தின் வேலை, அவர்கள் பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருந்ததால், அப்போஸ்தலர்கள் மற்றும் ஆரம்பகால சபையின் மூலம் எவ்வாறு தொடரப்பட்டது என்பதை கூறி அப்போஸ்தலருடைய நடபடிகள் லூக்கா சுவிசேஷத்தைப் பின்பற்றுகிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

# முடிவுரை

இந்தப் பாடத்தில், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் எழுத்தாளர் பற்றி நாம் ஆராய்ந்தோம்; அதன் வரலாற்று அமைப்பை நாம் விவரித்துள்ளோம்; மற்றும் அதன் இறையியல் பின்னணியையும் ஆராய்ந்தோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தைப் படிக்கும்போது இந்த விவரங்களை மனதில் வைத்திருப்பது அதன் அசல் அர்த்தத்தைக் கண்டறியவும், அதை நம் சொந்த வாழ்க்கையில் சரியாகப் பயன்படுத்தவும் உதவும்.

இந்தத் தொடரில் நாம் தொடரும்போது, அப்போஸ்தலர்களின் பின்னணி எவ்வாறு இந்த அற்புதமான புத்தகத்தில் பல சாளரங்களைத் திறக்கிறது என்பதைப் பார்ப்போம். ஆரம்பகால சபையைப் பற்றிய லூக்காவின் பதிவு எவ்வாறு தெயோப்பிலு மற்றும் ஆரம்பகால சபையை கிறிஸ்துவுக்கு உண்மையாக சேவை செய்ய எடுத்துச் சென்றது என்பதைக் கண்டுபிடிப்போம். நாம் நமது உலகத்தில் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைத் தொடர்ந்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிவிக்கும்போது, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இன்று சபைக்கு முக்கியமான வழிகாட்டுதலை வழங்குகிறது என்பதை நாம் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.